பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 16 வியாழக்கிழமை 29.04.2021 கதிர் 175

## இது ரகசியம் அல்ல!

மிக முக்கிய வழக்கொன்று கொழும்பில் மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு இன்று வருகின்றது.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான எழுச்சிப் பேரணி தொடர்பான வழக்குத் தான் அது.

இந்தப் பேரணி பக்கம்02 »



## இலங்கையில் பரவுவது பிரிட்டன் வைரஸே!

### பரிசோதனையில் உறுதிப்படுத்தல்; பாதிப்பு உச்சம் எனவும் எச்சரிக்கை

இலங்கையில் தற்போது பரவிவரும் புதிய கொரோனா வைரஸ் இந்தியாவில் பரவல் அடைந்து வரும் வைரஸ் இல்லை எனவும், அது பிரிட்டனில் பரவி வரும் B.1.1.7 என்ற ☞2

## மாவட்ட, பிரதேச செயலர்கள் இனிமேல் பௌத்த அலுவல்கள் ஆணையரும் கூட!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப்.29

இலங்கையின் மாவட்டச் செயலாளர்கள் பிரதேச செயலாளர்களிற்கு பௌத்த அலுவல்கள் ஆணையாளர் பதவி வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

2021.03.19ஆம் திகதிய உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் அமைச்சரவைப் பத்திரத்தின் படி, 2021.02.23ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இந்த நியமனம் மாவட்டச் செயலாளர்களிற்கும் பிரதேச செயலாளர்களிற்கும் எழுத்தில் ☞2

# இலங்கையை வதைக்கும் கொரோனா; ஒரே நாளில் 1,466 பேருக்குத் தொற்று!

## சிகிச்சை நிலையங்களில் நிரம்பி வழியும் நோயாளர்கள்

இலங்கையில் நேற்று மாத்திரம் 1,466 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாட்டில் கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படத் தொடங்கிய நாளிலிருந்து அதிக தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட நாளாக நேற்றைய நாள் பதிவாகியுள்ளது. ☞2

## எந்தச் சந்தர்ப்பத்திலும் நாட்டை முழுமையாக முடக்கமாட்டோம்!



### பிரதமர் மஹிந்த தெரிவிப்பு

இலங்கையில் கடந்த சில நாள்களாகக் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை வழமைக்கு மாறாக அதிகரித்துள்ள போதிலும், நாட்டின் பொருளாதாரம் மற்றும் சமூகத்துக்கு ஏற்படும் பாதிப்பைக் கருத்தில்கொண்டு எந்தச் சந்தர்ப்பத்திலும் நாட்டை முழுமையாக முடக்காதிருக்க அரசு தீர்மானித்துள்ளது.

– இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணம் ☞11

## அத்தியாவசியப் பொருள்களை சேமித்து வைப்பது அவசியம்!

### மக்களிடம் இராணுவத் தளபதி வேண்டுகோள்

நாட்டில் எதிர்வரும் நாள்களில் அதிக கொரோனா வைரஸ் தொற்று பதிவாகும் பிரதேசங்கள் எந்த நேரத்திலும் தனிமைப் படுத்தப்படலாம். எனவே, மக்கள் பல நாள்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களைச் சேமித்து வைப்பது அவசியம்.

– இவ்வாறு ☞2



## யாழில் மேலும் 12 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் மேலும் 12 பேருக்கும், வவுனியாவில் ஒருவருக்கும் என வடக்கு மாகாணத்தில் மேலும் 13 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டது என மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, யாழ். ☞2

## இந்தியாவிலிருந்து தப்பிவருவோரை மடக்க

# கடற்படை தீவிரக் கண்காணிப்பு

### இலங்கை மீனவர்கள் தொடர்பிலும் கெடுபிடி

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஏப்ரல்29

இந்தியாவில் கொரோனாத் தொற்று மோசமடைந்திருப்பதால் அதற்கு அஞ்சி அங்கிருந்து ஆள்கள் இலங்கைக்குள் ஊடுருவலாம் எனக் கருதப்படுகிறது. அதைத் தடுக்கும் நோக்கில் இலங்கைக் கடற்படையினர் தமது கடலோரக் கண்காணிப்பு நடவடிக்கையைத் தீவிரப்படுத்தியிருக்கின்றனர். இலங்கைக் கடற்படையின் இந்தக் கெடுபிடிகளால் இலங்கை மீனவர்கள் – குறிப்பாக வடக்கு, கிழக்கு மீனவர்கள் – அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டி நேர்ந்திருக்கின்றது என விசனம் தெரிவிக்கப்படுகின்றது. ☞2

## விமான நிலையத்தை உடனே மூட முடியாது!

### அமைச்சர் பிரசன்ன கூறுகின்றார்

விமான நிலையத்தை மூடுவது அல்லது சுற்றுலாப் பயணிகளின் வருகையைக் கட்டுப்படுத்துவது தொடர்பான முடிவுகள் சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைய எடுக்கப்படும் என்று சுற்றுலாத்துறை ☞2



## இந்தியாவில் இருந்து சட்டவிரோதமாக மன்னார் வந்த ஒருவருக்குக் கொரோனா

இந்தியாவில் இருந்து சட்டவிரோதமாக தலைமன்னாருக்கு வந்த போது கைது செய்யப்பட்ட நால்வரில் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டிருப்பதாக மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மேல் தெரிவித்துள்ளார்.

மன்னார் ☞11

## மஹிந்த திறந்துள்ள கதவின் ஊடாக எம்முடன் இணைந்துகொள்ளுங்கள்!

### அரசின் அதிருப்தியாளர்களுக்குச் சஜித் அழைப்பு

மஹிந்த ராஜபக்ஷ திறந்துள்ள கதவைப் பயன்படுத்தி அரசின் அதிருப்தியாளர்கள் ஆளும் கூட்டணியிலிருந்து வெளியேறி எம்முடன் இணைந்து கொள்ளுங்கள். விரைவில் மலரும் எமது ஜனநாயக ஆட்சியில் பங்காளிகளாகுங்கள்.

-இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். ☞2



தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொடர்பில் கல்முனை நீதிவான் நீதிமன்றம் விதித்த தடை உத்தரவை மீறி ஊர்வலம் சென்றனர் என நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், கோ.கருணாகரம், த.கலையரசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பா.அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன் உட்பட 29 பேருக்கு நாளை கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டிருக்கின்றது.

குற்றவியல்நடைமுறைச்சட்டக்கோவையின் 106 ஆம் பிரிவின் கீழ் அப்படித் தடை உத்தரவு விதிக்கவோ, அல்லது அதை ஒட்டி நீதிவான் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை விடுக்கவோ நீதிவான் நீதிமன்றுக்கு அதிகாரம் ஏதுமில்லை என்ற அடிப்படையில் நீதிவான் நீதிமன்றத்தின் நடவடிக்கைக்குத் தடை விதிக்குமாறு கோரி தடையீட்டு ஆணைக்கான மனு ஒன்று கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அந்த ரிட் மனு இன்று கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படும் போது மனுதாரர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முன்னிலையாகி எதிர்மனுதாரர்களுக்கு நோட்டீஸ் உத்தரவு பிறப்பிக்கவும், கல்முனை நீதிவான் நீதிமன்றம் 29 பேருக்கும் அழைப்பாணை விடுத்துள்ள நடவடிக்கைக்கு இடைக்காலத் தடை விதிக்கவும் கோரி வாதாடவிருக்கின்றார்.

கல்முனை நீதிவான் நீதிமன்றத்தின் நடவடிக்கைக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் இன்று இடைக்காலத் தடை உத்தரவு எதனையும் விதிக்குமானால், மேற்படி 29 பேரும் நாளை கல்முனை நீதிவான் நீதிமன்றில் முன்னிலையாகத் தேவையில்லை. இல்லையேல் நாளை கல்முனை நீதிவான் மன்றில் அவர்கள் அனைவரும் முன்னிலையாகி கல்முனை நீதிவான் நீதிமன்ற நடவடிக்கைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

என்ன நடக்கப் போகின்றது என்பது இன்று மாலைக்குள் தெரிந்து விடும்.

★ ★ ★

ஒன்றரை வருட கோட்டாபய ஆட்சி, வெளியில் தெரியாத பல குழப்பங்களை நாட்டில் ஏற்படுத்தியிருப்பதாக தென்னிலங்கை விமர்சகர் ஒருவர் சுட்டிக்காட்டுகின்றார்.

கடந்த இரண்டு தினங்களில் நடந்த இரண்டு முக்கிய விடங்களை அவர் விசேடமாகக் குறிப்பிடுகின்றார்.

ஒன்று – மேற்கு நாடுகளின் தூதுவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவைச் சந்தித்து, அவரின் தலைமைக்கு அங்கீகாரம் வழங்கியிருக்கின்றனர் என்றார் அவர்.

இப்படி அனைத்து மேற்குலகத் தூதுவர்களையும் சஜித் பிரேமதாஸா தாமே அழைத்துச் சந்திப்பது என்றால் குறைந்த பட்சம் ஒரு மாத காலத்துக்கு முன்னர் இருந்தே இதற்கான ஆயத்தங்களை அவர் செய்திருக்க வேண்டும். ஆனால், இது ஓரிரு நாள் ஏற்பாட்டில் அவசர அவசரமாகச் செய்யப்பட்ட ஒழுங்கு எனத் தெரிகின்றது. அதனால் சந்திப்புக்கான முயற்சி சஜித் பக்கத்தில் அல்ல, மறுபக்கத்திலிருந்துதான் ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டும். அதனால்தான் குறுகிய காலத்தில் அனைவரையும் திரட்ட முடிந்தது. காலையில் ஐரோப்பிய யூனியன் நாடுகளின் தூதுவர்கள் சஜித்தைச் சந்தித்தனர். பிற்பகலில் அமெரிக்கா, நோர்வே, பிரிட்டன், கனடா போன்ற பிற மேற்கு நாடுகளின் தலைவர்கள் சந்தித்து விரிவாக உரையாடினர்.

கோட்டா தரப்புக்கு – ஆளும் தரப்புக்கு – மேற்கு நாடுகள் இந்தத் திடீர் சந்திப்பு மற்றும் கலந்துரையாடல்கள் மூலம் ஒரு செய்தியை சொல்ல விழைகின்றன. சீனாவுடன் அதிகம் அணி சேர விரும்பும் கொழும்புக்கு இது ஒரு காட்டமான சமிக்ஞை. கொழும்பு இதைப் புரிந்து கொண்டிருக்கும் என நம்பலாம் என்றார் அந்த விமர்சகர்.

அவர் கூறிய அடுத்த விடயம் சீனப் பாதுகாப்பு அமைச்சரின் வருகையை ஒட்டி கொழும்பில் மக்கள் காட்டிய எதிர்வினை பற்றியது.

சீனப் பாதுகாப்பு அமைச்சரின் வருகையை ஒட்டி கொழும்பில் பல வீதிகள் திடீர் திடீரென மூடப்பட்டன. அதனால் அசௌகரியமடைந்த பொதுமக்கள் தமது எதிர்வினையை – பிரதிபலிப்பை – காட்டமாக வெளிப்படுத்தினர்.

சீனப் பாதுகாப்பு அமைச்சரின் வாகன அணி சென்ற போது, மறிக்கப்பட்டிருந்த மக்கள் வீதிகளில் கூக்குரலிட்டனர். தடுக்கப்பட்டிருந்த வாகனங்களில் இருந்து 'ஹோர்ன்' சத்தம் எழுப்பினர். இது பற்றிய காணொலிகள் முகப் புத்தகங்களில் தாராளமாக உலாவருகின்றன என்றார் அவர்.

வாகன அணியில் செல்பவர் சீனப் பாதுகாப்பு அமைச்சர் என்று தெரிந்துதான் மக்கள் அப்படி நடந்து கொண்டனரா என்று தெரியவில்லை எனக் குறிப்பிடும் அவர், சில சமயங்களில் சீனப் பாதுகாப்பு அமைச்சர் என்று தெரியாமலும், இந்த வாகனப் பேரணிக்காகத் தாங்கள் தடுக்கப்பட்டோம் என்ற எரிச்சலில் அது போகும் போது தமது எதிர்ப்பை மக்கள் வெளிப்படுத்தியிருக்கலாம் என்கின்றார் அவர்.

எது, எப்படியயன்றாலும், மொத்தத்தில் இந்தப் போக்குகள், செய்திகள், சமிக்ஞைகள் ஆட்சிப் பீடத்துக்கு நல்ல தல்ல என்பது மட்டும் தெளிவு. அதிகாரத் தரப்பார் புரிந்து கொண்டால் சரி...!

–மின்னல் –

## அத்தியாவசியப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நாங்கள் மக்களைப் பீதியடையச் செய்யவோ அல்லது நிலைமையை மறைக்கவோ தேவையில்லை. ஆனால், எந்தவொரு சூழ்நிலையையும் எதிர்கொள்ளத் தயாராக இருப்பது முக்கியம்.

நாட்டில் பதிவாகும் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தே பிரதேசங்களை முடக்குவது தொடர்பில் தீர்மானிக்கப்படும்.

பாதிக்கப்பட்ட அனைவருக்கும் சிகிச்சையளிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

இதற்கமைய தேவைப்பட்டால் மருத்துவமனைகளுக்குக் குறைந்தபட்சம் 10 ஆயிரம் படுக்கைகளை வழங்கவும், நோயாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கொரோனா சிகிச்சை மையங்களை அதிகரிக்கவும் இராணுவம் தயாராக இருக்கின்றது.

அத்தோடு நாட்டில் தேவைக்குப் போதுமான ஒட்சிசன் இருப்பதாக சுகாதாரப் பிரிவு உறுதிப்படுத்தியுள்ளது. பொய்யான தகவல்கள் குறித்து மக்கள் குழப்பம் அடையாது உத்தியோகபூர்வ நிறுவனங்கள் வெளியிடும் தகவல்களுக்கு மட்டுமே கவனம் செலுத்த வேண்டும்.

எத்தனை சவால்கள் வந்தாலும், எத்தனை அலைகள் வந்தாலும் ஒரே தேசமாக அதனை எதிர்கொண்டு வெற்றி அடைவோம் – என்றார்.

## இலங்கையில் பரவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எனவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு, பொரலஸ்கமுவ மற்றும் குருநாகல் ஆகிய பிரதேசங்களிலிருந்து பெறப்பட்ட மாதிரிகளைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் போது இது உறுதிப்படுத் தப்பட்டுள்ளது என ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தின் ஒவ்வாமை, எதிர்ப்பு சக்தி ஆய்வு மற்றும் மரபணு விஞ்ஞான நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்தர தெரிவித்தார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன் காரணமாக இலங்கையில் தற்போது கொரோனா வைரஸ் தொற்று வேகமாகப் பரவி வருகின்றது எனவும், அதனால் பாதிப்பு அதிகரிக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கையை வதை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்றுக் காலையிலிருந்து மாலை வரை 988 தொற்றாளர்களும், மாலையிலிருந்து இரவு வரை 478 தொற்றாளர்களும் இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன் மூலம் நாட்டின் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 4 ஆயிரத்து 953 ஆக எகிறியுள்ளது.

தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 95 ஆயிரத்து 83 ஆக உயர்வடைந்துள்ளது.

உயிரிழந்தவர்களின் பட்டியலில் நேற்றும் 6 பேர் பதிவாகியுள்ள நிலையில் நாட்டில் கொரோனாவால் சாவடைந்தவர்களின் எண்ணிக்கை 661 ஆக அதிகரித்துள்ளது.

தொற்றுக்குள்ளான 9 ஆயிரத்து 209 நோயாளர்கள் நாடளாவிய ரீதியில் உள்ள சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொரோனா நோயாளர்களின் சடுதியான அதிகரிப்பால் சிகிச்சை நிலையங்கள் நிரம்பி வழிகின்றன என்று சுகாதார அதிகாரிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

## மஹிந்த திறந்துள்ள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

'அரசின் திட்டங்களை அரசுக்குள் இருந்து விமர்சிப்பவர்கள் அரசிலிருந்து தாராளமாக வெளியேறலாம். கதவு திறந்துதான் உள்ளது' என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பின்போது காரசாரமாகத் தெரிவித்திருந்தார்.

பிரதமர் மஹிந்தவின் இந்தக் கருத்துத் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

அரசின் உள்வீட்டுப் பிரச்சினை இன்று பூகம்பமாகி வெளிச்சத்துக்கு வந்துள்ளது. பிரதமர் மஹிந்தவின் இந்தக் கருத்துக்களிலிருந்து அரசின் குழப்பங்கள் சந்திக்கு வந்துள்ளன.

தனக்கு கீழ் இருக்கின்ற அமைச்சர்களையும், பங்காளிக் கட்சி தலைவர்களையும் கட்டுப்படுத்த முடியாத பிரதமர் இந்த நாட்டை எப்படி முன்னேற்றப் பாதைக்கு கொண்டு செல்லப் போகின்றார்.?

அரசு ஆட்டம் காணத் தொடங்கியுள்ள இந்தச் சூழலில்தான் பிரதமரின் சீற்றமான கருத்துக்கள் வெளியாகியுள்ளன. அரச தலைமை ஒழுங்கான பாதையில் பயணித்திருந்தால் அதற்குள் முரண்பாடுகள் ஏற்பட்டிருக்க சந்தர்ப்பம் இருந்திருக்காது.

பிரதமர் மஹிந்த திறந்துள்ள கதவைப் பயன்படுத்தி வெளியேற விரும்புவர்கள் எம்முடன் கைகோர்க்கலாம். நாட்டு மக்கள் விரும்புகின்ற – சர்வதேசம் திரும்பிப் பார்க்கின்ற – நாட்டை பொருளாதார ரீதியில் முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லக் கூடிய பலம் மிக்க ஜனநாயக ஆட்சியை நிறுவ நாம் தயாராக இருக்கின்றோம். அது விரைவில் மலரும் என்ற நம்பிக்கை எமக்கிருக்கின்றது. எனவே, அரசிலுள்ள அதிருப்தியாளர்களுக்கு எதிர்க்கட்சியிலுள்ள உறுப்பினர்களுக்கும் பலம் மிக்க ஆட்சியை நிறுவ நான் அழைப்பு விடுக்கின்றேன் – என்றார்.

## விமான நிலையத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

விமான நிலையத்தின் வழியாக வருபவர்களில் பெரும்பாலானோர் வெளிநாட்டினர் என்பதால் விமான நிலையத்தை உடனடியாக மூட முடியாது எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

எனினும், கொரோனாத் தொற்று தீவிரமடைந்துள்ள இந்தியாவிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளைக் கண்காணிக்க விசேட கண்காணிப்புப் பொறிமுறை ஒன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது எனவும் அவர் கூறினார்.

இந்தியா – இலங்கைக்கு இடையிலான பரஸ்பர விமானப் போக்குவரத்து ஊடாக இலங்கைக்கு வருகை தரும் இந்தியச் சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்கனவே பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு இந்தியாவிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் தனி ஹோட்டல் அறைகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனவும், இவர்களின் வருகையைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மாவட்ட, பிரதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவுறுத்தலிற்கு அமைய மாவட்டச் செயலாளர்களை பௌத்த அலுவல்கள் மேலதிக ஆணையாளர் நாயகம் எனவும், பிரதேச செயலாளர்கள் பௌத்த அலுவல்கள் ஆணையாளர் எனவும் பதவிப் பெயர்கள் குறிப்பிட்டுக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்துடன் அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரதியும் இணைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## கடற்படை தீவிரக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மன்னார் பேசாலை மீனவர்கள் கடற்படையினரிடம் பதிவு செய்தே இனிக் கடலிற்குள் செல்ல முடியும் எனக் கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

இதற்கமைய பேசாலையில் தற்போது 215 ட்ரோலர் படகுகளும், 385 பிற படகுகளும் உள்ளன. அதே நேரம் இதன் அருகே உள்ள கிராமமான காட்டாஸ்பத்திரி கிராமத்தில் 285 படகுகள் உள்ளன. இவர்கள் தொடர்பான நடவடிக்கைகள், பதிவுகள் மற்றும் மேற்கொள்ள வேண்டிய ஏற்பாடுகள் தொடர்பாக இன்று மன்னாரில் விசேட கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. இந்தக் கூட்டத்திற்கு மாவட்டக் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் மற்றும் கடற்படை அதிகாரிகள் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்த ஏற்பாடுகளுக்கு அமைய இனி வரும் நாள்களில் இப்பகுதி மீனவர்கள் கடலிற்கு செல்ல கடற்படையினரிடம் பதிவுகளை மேற்கொண்டு அனுமதி பெறுவதோடு, அவர்கள் கடலுக்குள் இறங்கும் போதும் கடலிலிருந்து திரும்பும் போதும் பரிசோதனைகளும் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழகத்தில் ஏற்கனவே தஞ்சம் புகுந்து வசிக்கும் வடக்கு, கிழக்கைப் பூர்வீகமாகக் கொண்ட தமிழர்கள், அங்கு மோசமாகப் பரவி வரும் கொரோனாவுக்கு அஞ்சி, கடல் வழியாக இங்கு மீளவும் தப்பி ஓடி வர முயலலாம் எனக் கருதப்படுகின்றது. அத்தகையோர் மூலம், அங்கு ஏற்கனவே திரிபடைந்து பரவி வரும் கொரோனா வைரஸ் இங்கும் பரவலாம் என்ற அச்சத்திலேயே கடற்படையின் கரையோரக் கண்காணிப்பு நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

## யாழில் மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பல்கலைக் கழக மருத்துவபீட ஆய்வுகூடங்களில் 660 பேரின் மாதிரிகள் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போதே, 13 பேருக்குக் கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டது.

இதில், சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் மூவருக்கும், யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இருவருக்கும், கரவெட்டி, வேலணை மற்றும் கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் தலா ஒருவருக்கும் எனச் சுயதனிமைப்படுத்தலில் இருந்த 8 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை நோயாளர் விடுதியில் சிகிச்சை பெற்ற ஒருவருக்கும், வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற வந்த ஒருவருக்கும் என இரண்டு பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

அதேவேளை, யாழ்ப்பாணம் சிறைச்சாலைக் கைதிகள் இருவருக்கு தொற்று கண்டறியப்பட்டது.

வவுனியா செட்டிக்குளம் பிரதேச வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்ற ஒருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது – என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை மாவட்டத்தில் கொரோனா அதிகரிப்பு

## பிரதி பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் தகவல்



கொரோனா நோய்த்தொற்றுக்கு உள்ளாகி திருகோணமலை மாவட்டத்திலுள்ள தனிமைப்படுத்த நிலையங்களில் சிகிச்சை பெற்று வருகின்றவர்களில் நால்வருக்கு கடந்த இரண்டு நாள்களுக்குள் அபாயகரமான நிலைமை ஏற்பட்டு இருப்பதன் காரணமாக அவர்கள் மேலதிக சிகிச்சைகளுக்காக வேறு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் என திருகோணமலை மாவட்ட பிரதி பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் வி. பிரேமானந் நேற்று(புதன்கிழமை) நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

திடீரென ஏற்பட்ட மூச்சுத் திணறல் காரணமாக அவர்கள் அவதியுற்றனர் எனவும் இதன் காரணமாக குறித்த மூவரில் ஒருவரை முல்லேரியா வைத்தியசாலைக்கும் மற்றைய இருவரையும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கும் கடந்த செவ்வாய்க்கிழமை இடமாற்றம் செய்துள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

குறித்த நபர்கள் ஒக்சிஜன் மூலம் சிகிச்சை பெற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார் இந்த நிலைமை திருகோணமலை மாவட்டத்தில் முதற்தடவையாக அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதன் காரணமாக மாவட்டத்தில் உள்ள தள வைத்தியசாலைகளை இப்படியான அறிகுறிகள் ஏற்படும் நோயாளர்களை பராமரிப்பதற்கு உரிய வசதிகளை ஏற்படுத்த வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்பட்டிருக்கின்றது என குறிப்பிட்டார்.

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த 24 மணித்தியாலங்களில் புதிய 67 தொற்றுக்கு உள்ளானவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கந்தளாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 2, கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 5, குறிஞ்சாங்கேணி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 1, தம்பலகாமம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 1, திருகோணமலை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 27, உப்புவெளி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 31, அடங்கலாக திருகோணமலை மாவட்டத்தில் 67 கொரோனா நோய்த் தொற்றுக்கு உள்ளானவர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளனர்.

இந்த வருடத்தில் திருகோணமலை மாவட்டத்தில் 1,269 நோய்த் தொற்றுக்கு உள்ளானவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது

# ஓட்டமாவடியில் பி.சி.ஆர். சோதனை



நாட்டில் கொரோனா வைரஸ் தாக்கத்தின் மூன்றாவது அலை பரவியுள்ள நிலையில் ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.எச்.எம்.தாரிக் தலைமையில் பி.சி.ஆர். பரிசோதனைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் அண்மையில் இரண்டு கொரோனாத் தொற்றாளர்கள் இணங்காணப்பட்ட நிலையில் நேற்று (புதன்கிழமை) மேலெழுவாரியாக ஓட்டமாவடி பிரதேசத்தில் பி.சி.ஆர். பரிசோதனைகள் இடம்பெற்றன.

இந்த நிலையில் முகக்கவசம் அணியாது வீதிகளில் மற்றும் பஸ்களில் பயணம் செய்வோரைப் பொலிஸாரின் உதவியுடன் பிடித்து மேலெழுவாரியாக பி.சி.ஆர். பரிசோதனைகள் இடம்பெற்றமையுடன், இதில் 65 பேருக்கு பி.சி.ஆர். மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.எச்.எம்.தாரிக் தெரிவித்தார்.

குறித்த பி.சி.ஆர். பரிசோதனை நிகழ்வில் மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஏ.எல்.நௌபர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள், வாழைச்சேனைப் பொலிஸார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நுவன் சொய்சாவிற்கு 6 வருட காலம் கிரிக்கெட்டில் பங்கேற்கத் தடை



முன்னாள் இலங்கை கிரிக்கெட் வீரர் நுவன் சொய்சாவிற்கு 6 வருட காலம் கிரிக்கெட் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த காலப்பகுதியில் அவரால் எவ்வித போட்டிகளிலும் கலந்துகொள்ள முடியாத வகையில் சர்வதேச கிரிக்கெட் சபையால் இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டு ஐக்கிய அரபு இராச்சியத்தில் இடம்பெற்ற ரி10 போட்டியில் ஸ்ரீலங்கா அணியின் பந்து வீச்சு பயிற்றுவிப்பாளராக இருந்த சந்தர்ப்பத்தில் ஊழல் மோசடி எதிர்ப்பு விதிகளை மீறினார் என அவருக்கு எதிராகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

# அம்பலாங்கொடை நகரபிதாவுக்கு கொரோனாத் தொற்று உறுதி

அம்பலாங்கொடை நகர சபையின் தலைவருக்கு கொவிட் 19 தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதனடிப்படையில் குறித்த நகர சபை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தொற்று உறுதி செய்யப்பட்ட நகர சபை தலைவர் ஐ.டி.எச். வைத்தியசாலைக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் கம்பளை நகரில் உள்ள காப்புறுதி நிறுவனம் ஒன்றின் ஊழியர்களுக்கு மேற்கொண்ட அன்டிஜன் பரிசோதனையில் 22 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அவர்களுடன் தொடர்பில் இருந்த 30 குடும்பங்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் இதுவரையில் 103,487 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அவர்களுள் 94,856 பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# பல்கலை கல்வி நடவடிக்கை 10 ஆம் திகதி மீள ஆரம்பம்

எதிர்வரும் 10 திகதி முதல் இலங்கையில் உள்ள அனைத்து அரச பல்கலைக்கழகங்களின் கல்வி நடவடிக்கைகளும் ஆரம்பமாகும் என கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று (புதன்கிழமை) கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

கொரோனாத் தொற்று காரணமாக இலங்கையில் உள்ள அனைத்து அரச பல்கலைக்கழகங்களும் மீண்டும் திறக்கப்படுவது இரண்டு வாரங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

ஏப்ரல் 27 ஆம் திகதி பல்கலைக்கழகங்கள் மீண்டும் திறக்கத் தீர்மானிக்கப்பட்ட போதும் கொரோனாத் தொற்றின் மூன்றாவது அலை காரணமாக அந்த முடிவு ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# களனி பல்கலையில் 4 மாணவர்களுக்கு தொற்று நிர்வாகத்தின் மீது மாணவர் சங்கம் அதிருப்தி

களனி பல்கலைக்கழக அறிவியல் பீடத்தின் நான்கு மாணவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

களனி பல்கலைக்கழக அறிவியல் பீட மாணவர் சங்கம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்தஊடகஅறிக்கையில்மேலும்கூறப்பட்டுள்ளவை வருமாறு –

பல்கலைக்கழகத்தின் முதலாண்டு தேர்வுகளுக்கு அழைத்து வரப்பட்ட மாணவர்கள் குழுவில் சிலர், கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் ஏனைய மாணவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவர் என கூறப்பட்டபோதிலும், தனிமைப்படுத்தல் செயல்முறை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

இவ்வாறு மாணவர்களின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் நிர்வாகத்தின் முயற்சியை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

மேலும் நிர்வாகத்தின் தன்னிச்சையான முடிவுகள் சமூகத்தில் அதிக கொரோனா பரவும் நிலைமை காணப்படுகின்றன என களனிப் பல்கலைக்கழகத்தின் அறிவியல் பீட மாணவர் சங்க அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# 225 எம்.பிக்களுக்கும் விரைவில் வருகின்றது சொகுசு வாகனம்!

நாடாளுமன்ற உறுப்பினர்கள் 225 பேருக்கும் விரைவில் சொகுசு வாகனங்களை இறக்குமதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்த பின்னர், முதலில் அமைச்சர்கள், உறுப்பினர்களுக்கான வாகனங்களை இறக்குமதி செய்யப் போவதில்லை என்றும் தற்போது உள்ள வாகனங்களைப் பயன்படுத்தும்படியும் உத்தரவிட்டிருந்தார்.எனினும் தற்சமயம் வாகனங்கள் தேவைப்படுவதாக பல மாதங்களாக ஜனாதிபதியிடம் கோரிக்கை முன்வைத்துவந்த நிலையில், அதற்கான அனுமதியை அவர் அளித்திருக்கிறார் என தெரியவருகின்றது.

அதன்படி இலங்கை வங்கியின் ஊடாக வாகன இறக்குமதிக்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க ஆவணங்கள் தயார்ப்படுத்தப்பட்டு வருவதாகவும் அறியமுடிகின்றது.

# மரக்கறிகளின் விலை அதிகரிக்கும் வாய்ப்பு



கொரோனா தொற்று காரணமாக தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையம் இரண்டு வாரங்களுக்கு மூடப்பட்டதால் மரக்கறிகளின் விலை கடுமையாக அதிகரிக்கக்கூடும் என அனைத்து இலங்கை விவசாயிகள் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு மூடப்பட்டதன் காரணமாக அரசாங்கம் விவசாயிகளுக்கும் நுகர்வோருக்கும் தற்காலிக தீர்வை வழங்கத் தவறியுள்ளதாகவும் அந்தச் சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் நாமல் கருணாரத்ன தெரிவித்தார்.

நுகர்வோர் அதிக விலை கொடுக்க வேண்டிய அபாயத்தை எதிர்கொள்ளும் அதே வேளையில் விவசாயிகள் பொருள்களை விற்பனை செய்வதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர் என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

நோய்த் தொற்று மத்தியில் இது போன்ற முடிவுகளை எடுப்பது முக்கியம் என்றாலும், விவசாயிகள் மற்றும் நுகர்வோர் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எனவே இந்த விவகாரம் தொடர்பாக அரசாங்கம் உடனடியாக தீர்வை வழங்க வேண்டும் என்றும் நாமல் கருணாரத்ன கேட்டுக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பொறுப்போடு செயற்படுவோம்!

**கொரோனாப் பேரரக்கனின் பிடி நாளுக்கு நாள் தீவிரமடைந்து வருகின்றது.**

**இலங்கையில் முதன் முறையாக நாளொன்றில் தொற்றாளர் எண்ணிக்கை ஆயிரத்தைக் கடந்துள்ளது.**

**நாட்டில் தீவிரமடைந்த – வீரியம் மிக்க – கொரோனா வைரஸின் பரவல் தீவிரமடைந்து வருவதாக சுகாதாரப் பகுதி எச்சரித்துள்ளது. அதனால் பொதுமக்கள் மிகமிகக் கவனமாகவும், முன்னெச்சரிக்கையாகவும் செயற்படும்படி சுகாதாரப் பகுதியினரும், மருத்துவத் துறையினரும், அரச உயரதிகாரிகளும் தொடர்ந்து மக்களிடம் விநயமாகவும் திரும்பத் திரும்பவும் கோரி வருகின்றனர்.**

**இரண்டு மீற்றர் சமூக இடைவெளியைப் பேணுங்கள், எந்நேரமும் முகக் கவசம் அணிந்திருங்கள், கூட்டங்களைத் தவிருங்கள், அடிக்கடி கைகளைத் தொற்று நீக்கி மூலம் கழுவுங்கள் என்றெல்லாம் மீண்டும் மீண்டும் பல தரப்புகளினாலும் வலியுறுத்தி எச்சரிக்கப்படுகின்றது.**

**ஆனால், நம் மக்கள் இந்த வழிகாட்டல்கள் குறித்து சிரத்தை எடுப்பவர்களாகத் தெரியவில்லை. பொறுப்பின்றி அசட்டையீனமாக – விட்டேத்தியாக – மக்கள் செயற்படுகின்றமை அப்பட்டமாக வெளிப்படுகின்றது.**

**பிரதேசங்களில் பொதுச் சுகாதார அதிகாரிகள் வரை விடுக்கும் எச்சரிக்கை சமூக மட்டத்தில் புறக்குடத்து நீராக – விழலுக்கு இறைத்த நீராக – வீணாவதுதான் மிச்சம்.**

**கோயில்களில் மக்கள் கூடுவதைப் பார்க்கும்போது நமது சமூகம் படிப்பறிவற்றதா என்ற கேள்வியையே நம்மை நாமே கேட்கத் தோன்றுகின்றது.**

**பொதுப் போக்குவரத்திலும் மக்கள் முண்டியடிக்கும் நிலைமை. அது கூட வேறு வழியின்றி பின்பற்றப்படுகின்ற கட்டாய சூழ்நிலை என்று கூறி நியாயப்படுத்தலாம்.**

**ஆனாலும் இவ்வளவு வழிகாட்டல்கள், விழிப்புணர்வு நடவடிக்கைகளின் பின்னரும் ஆலயங்கள், பொது நிகழ்வுகளில் மக்கள் ஒன்று திரள்வது என்பது வினையைத் தேடி விலைக்கு வாங்கும் வேலையன்றி வேறில்லை.**

**ஏற்கனவே நாட்டில் நூறு கிராம சேவையாளர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.**

**இவ்வளவு தூரம் பரவலாகத் தொற்று அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் நாமாக நம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் முன்னெச்சரிக்கைப் பழக்கவழக்கங்களைப் பின்பற்றாமல் விட்டால் அத்தொற்றுக்கு நாம் ஒவ்வொருவரும் இலக்காவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.**

**அது மாத்திரமல்ல, இத்தகைய சூழலில் முழு நாட்டையும் முடக்கியும் கூட கொரோனாப் பேரரக்கனைக் கட்டுப்படுத்த முடியாது என்ற நிலைமையே ஏற்படும்.**

**இந்தியாவில் மோசமடைந்திருக்கும் கொரோனாத் தொற்றுக் குறித்து அதிகம் பேசுகிறோம். காணொலிகளைப் பார்த்து மலைத்துப் போய் நிற்கின்றோம். அதிர்வுற்றுக் கலங்குகின்றோம். ஆனால் அத்துடன் விடயத்தை விட்டு விடுகின்றோம். ஒரு பார்வையாளனாக அதனைப் பார்த்துப் பரிதவிப்பதுடன் மறந்து விடுகிறோம்.**

**அந்தக் களநிலைமை நம் மண்ணுக்கு கூட வந்து விடலாம் என்ற அச்சம் நம் மத்தியில் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.**

**இந்தியாவின் பல மாநிலங்களில் நடக்கும் சாவுகள், மருத்துவ வசதிப் பற்றாக்குறைகள் நம் மண்ணுக்கு நேராது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.**

**நேற்று அங்கு ஏற்பட்ட நிலைமை நாளை நம் நாட்டிலும் – நம் மண்ணிலும் – வரலாம். வருவதற்கு அதிக வாய்ப்புகளுண்டு.**

**நாமாக முன்னெச்சரிக்கை கொண்டு, நாம் ஒவ்வொருவரும் பொறுப்புணர்வுடன் செயற்படாவிட்டால் –**

**தொடர்ந்தும் அசண்டையீனமாக, விட்டேத்தியாக நடப்போமானால் –**

**இந்தியாவின் பல மாநிலங்களில் ஏற்பட்ட நிலைமை இங்கும் விரைந்து வரும்.**

**தொற்று ஏற்பட்டோருக்கு மருத்துவ சிகிச்சை வழங்குவதில் உச்சக் கட்டத்தில் நாடு இருக்கின்றது. பல ஆஸ்பத்திரிகள் நிரம்பி வழிகின்றன. கொரோனாத் தொற்று நோயாளர்களுக்கான சிகிச்சைக் கூடங்களில் கட்டில்கள் நிரம்பி வழிகின்றன.**

**இதற்கு மேலும் தொற்றாளர் எண்ணிக்கை வீங்குமானால் நோயாளரைக் கவனிக்காமல் கைவிடும் நிலைமை – இந்தியாவில் பல இடங்களில் நடப்பது போன்று – இங்கும் நேரும்.**

**அதிகரிக்கும் தொற்றாளர்கள் எண்ணிக்கை நெருக்கடியைச் சமாளிப்பதற்கு புதிய, புதிய கட்டடங்களில் சிகிச்சை நிலையங்களைத் திறப்பதற்கு அதிகாரிகள் தீர்மானித்தாலும் கூட, அங்கெல்லாம் உரிய மருத்துவ வசதிகள், கருவிகளைப் பொருத்துவதும் பெறுவதும் சாத்தியமானவையல்ல.**

**திருடனாகப் பார்த்துத் திருந்தினால்தான் திருட்டை ஒழிக்கலாம் என்பதைப் போல, மக்களாக நாங்கள் பொறுப்புடன் செயற்பட்டால் மட்டுமே கொரோனாப் பேரரக்கனை அடக்க முடியும்.**

## களுத்துறை சிறைக்குள் வீசப்பட்ட பொதிகள்



களுத்துறை சிறைச்சாலையின் பீ பிரிவிற்குள் கடந்த (வியாழக்கிழமை) பிற்பகல் 2.30 மணிக்கு வீசப்பட்ட தடை செய்யப்பட்ட பொருள்கள் உள்ளடங்கிய பொதி ஒன்றை சிறைச்சாலை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த பொதியில் இருந்து ஹெரோயின் என சந்தேகிக்கும் 158 பக்கெட்டுக்கள், கஞ்சா 20 கிராம், கையடக்க தொலைபேசி 2 மற்றும் 30 போதை மாத்திரைகளை சிறைச்சாலை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

இதேவேளை நேற்று (புதன்கிழமை) காலையிலும் குறித்த பகுதியின் கூரைக்கு மேலால் வீசப்பட்ட பொதி ஒன்றைச் சிறைச்சாலை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

அந்தப் பொதியில் இருந்து 6 தொலைபேசிகள், புகையிலை 10 மற்றும் 2 சார்ஜர்கள் கைப்பற்றப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## மட்டு.நகரில் சுகாதார நடைமுறைகளை பேணாதவர்களுக்கு அன்டிஜன் சோதனை

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுகாதார நடைமுறைகளைப்பேணாதவர்களை அன்டிஜன் பரிசோதனைகளுக்குட்படுத்தும் செயற்பாடுகள் நேற்று (புதன்கிழமை) முன்னெடுக்கப்பட்டன.

மட்டக்களப்பு நகருக்குள் வருவோரும் செல்வோரும் சுகாதார நடைமுறைகளைப் பேணும் வகையில் இறுக்கமான கட்டளைகளைச் சுகாதாரப் பிரிவினரும் பொலிஸாரும் வழங்கிவரும் நிலையில் அவற்றை உதாசீனம் செய்யும் செயற்பாடுகளைச் சிலர் மேற்கொண்டுவருகின்றனர்.

இதனைக் கருத்திக்கொண்டு முகக்கவசம் அணியாதவர்கள் மற்றும் முகக்கவசங்களைச் சரியான முறையில் அணியாதவர்கள் நேற்று அன்டிஜன் பரிசோதனைகளுக்குட்படுத்தப்பட்டனர்.

நேற்று மட்டக்களப்பு நகரில் உள்ள வங்கிகளில் கடமையாற்றும் வங்கி உத்தியோகத்தர்கள் அன்டிஜன் பரிசோதனைகளுக்குட்படுத்தப்பட்டனர்.

மட்டக்களப்பு அரசடி சந்தியில் இந்த பரிசோதனைகளை மட்டக்களப்பு சுகாதாரத் திணைக்களத்தால் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது வீதிச் சோதனைகளை மேற்கொண்ட பொலிஸாரும் சுகாதாரப் பிரிவினரும் முகக்கவசம் அணியாதவர்கள் மற்றும் முகக் கவசங்களைச் சரியான முறையில் அணியாதவர்கள் அன்டிஜன் பரிசோதனைகளுக்குட்படுத்தினர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும்பொலிஸாரும்சுகாதாரப்பிரிவினரும் இணைந்து சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக கடைப்பிடிக்கச்செய்யும் செயற்பாடுகளை முன்னெடுத்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கொரோனாத் தொற்று நோயாளர்களால் நிரம்பி வழியும் கம்பஹா வைத்தியசாலை

கம்பஹா வைத்தியசாலை கொரோனா வைரஸ் தொற்றாளர்களால் தற்போது நிரம்பியுள்ளது என வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொரோனா வைரஸ் தொற்றாளர்களுக்காக சிகிச்சையளிக்க அமைக்கப்பட்ட கம்பஹா பொது வைத்தியசாலையிலுள்ள அறையின் படுக்கைகள் மற்றும் வெரெல்லவத்தவிலுள்ள பெண்கள் கொரோனா சிகிச்சை மையத்திலுள்ள படுக்கைகள் நிரம்பியுள்ளன. ஆகவே கொரேனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ள நோயாளர்களை ஏனைய சிகிச்சை நிலையங்களுக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## கழிவகற்றல் பற்றி உண்மை, நல்லிணக்க குழு வவுனியா நகரபிதாவுடன் நேற்றுக் கலந்துரையாடல்

வவுனியா நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் கழிவகற்றல் செயற்பாடுகள் சீராக இடம்பெறாமையால் மக்கள் எதிர்நோக்கும் விடயங்கள் தொடர்பில் வவுனியா மாவட்ட உண்மை மற்றும்நல்லிணக்ககுழுநகரசபைதலைவருடன் கலந்துரையாடலினைமேற்கொண்டிருந்தது.

வவுனியா நகரசபை பகுதியில் குடியிருப்பாளர்கள் மற்றும் வர்த்தகர்களால் தரம் பிரித்து கழிவுகள் வழங்கப்பட்டால் மாத்திரமே கழிவகற்றல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என சில பகுதிகளுக்குத் தெரிவிக்கப்பட்ட போதிலும் அதனை செயற்படுத்துவதற்கு சீரான பொறிமுறை மக்களுக்கு வழங்கப்படாமையால் குடியிருப்பாளர்கள் சிரமத்திற்குள்ளாகியிருந்தனர்.

இந்நிலையில் கழிவுகளை தரம்பிரிக்காமையால் கழிவுகளைப் பெற்றுக்கொள்ள முடியாது என நகரசபை சுத்திகரிப்பு தொழிலாளர்களும் தெரிவித்தமையால் பல வட்டாரங்களில் கழிவுகள் அகற்றப்பாடாமல் பெரும் அசளகரியத்திற்கு மக்கள் முகம் கொடுத்து வந்தனர்.

இந்நிலையில் நேற்று இவ்விடயம் தொடர்பாகவும் இதற்கான சாதக நிலைமைகள் தொடர்பாகவும் வவுனியா நகரசபை தலைவருடன் உண்மை மற்றும் நல்லிணக்க குழு பிரதிநிதிகள் கலந்துரையாடியிருந்தனர்.

இதன்போது அந்தக் குழுவினரால் கழிவகற்றல் செயற்பாட்டுக்கு சிறந்த பொறிமுறை தேவை எனவும் மக்களுக்கு கழிவுகளைத் தரம்பிரித்து வைப்பதற்கான நீண்ட காலப் பாவனைக்குரிய பொருள்கள் வழங்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அத்துடன் குடியிருப்பாளர்களுக்குப் போதுமான அறிவுறுத்தல்கள் வழங்கப்படாமல் குறித்த செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டதாலேயே இவ்வாறான நிலை ஏற்பட்டமையையும் சுட்டிக்காட்டியிருந்தனர். இந்நிலையில் வவுனியா நகரசபை தலைவரால் குறித்த குழுவுக்கு கருத்துத் தெரிவிக்கப்பட்ட போது –

18 தொன் கழிவுகள் வவுனியா நகரசபை பகுதியில் நாளொன்றுக்கு அகற்றப்பட்டு வருகின்றன எனவும் இதனை சீரான பொறிமுறையின் கீழ் செயற்படுத்தவே சில நடைமுறைகளைப் பின்பற்றியதாகத் தெரிவித்துடன் இதனால் மக்கள் அசௌகரியத்திற்குள்ளாகியிருந்தமை தனக்குத் தெரிவிக்கப்பட்டதாகவும் கூறியிருந்தார்.

இந்நிலையில் தற்போது அந்த நடைமுறையைத் தான் தளர்த்தியுள்ளதாக வும் தற்போது கழிவகற்றலில் சிக்கல் நிலை மக்களுக்கு இல்லை எனவும் தெரிவித்திருந்தார்.

இதேவேளை நகரசபை தலைவர் சரியான பொறிமுறையின் கீழ் தரம்பிரித்து கழிவகற்றல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவித்தார் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, நகரசபையின் திட்டத்தை வரவேற்ற உண்மை மற்றும் நல்லிணக்க குழு, இந்தத் திட்டத்தை அனைத்து இடங்களிலும் உடனடியாக நடைமுறைப்படுத்தாது முதலில் நகர்ப்பகுதியில் செயற்படுத்தி அதனூடாக வரும் அனுபவத்தின் ஊடாக ஏனைய வட்டாரங்களிலும் நடைமுறைப்படுத்துவது சிறந்த நடைமுறையாக இருக்கும் என ஆலோசனையும் வழங்கியுள்ளதாகவும் தெரிவித்திருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே தினத்தை தனித்து நடத்தவே தீர்மானித்தோம்: கொவிட் வைரஸ் தடுத்துவிட்டது - சுதந்திரக் கட்சி

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மே தின பேரணியை தனித்து நடத்துவதற்குத் தீர்மானித்திருந்த போதிலும், கொவிட் - 19 வைரஸ் காரணமாக அதனை நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. எனினும் கட்சியின் தொழிற் சங்கத்துடன் கலந்துரையாடி தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கையை ஜனாதிபதிக்கு கையளிக்க எதிர்பார்த்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

ஆடை தொழிற்சாலை திணைக்களத்துக்கான பயிற்சி ஆலோசகர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை அமைச்சரின் தலைமையில் உலக வர்த்தக மையத்தில் இடம்பெற்றிருந்தது. இதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் கூறியவை வருமாறு -

சுதந்திரக் கட்சியின் மே தினப் பேரணி காலாகாலமாக தனித்தே நடத்தப்பட்டு வந்துள்ளது. அதற்கமைய இம்முறையும் அவ்வாறு நடத்தவே தீர்மானித்திருந்தோம். எனினும் வைரஸ் பரவல் காரணமாக மே தின பேரணிகளை நடத்த வேண்டாம் என கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. அதனால் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து பார்த்து ஜனாதிபதியிடம் அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளோம்.



இந்நிலையில், கட்சியின் முன்னேற்றம் தொடர்பில் கட்சியின் உறுப்பினர்களுடனான கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. அதற்கமைய எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல் தொடர்பிலும் இதன்போது பேசப்பட்டு வருகின்றது. தேர்தல் தொகுதி ஒன்றுக்கு மூன்று உறுப்பினர்கள் வேட்பாளர்களாக நிறுத்தப்படுகின்றமை மற்றும் மேலதிக உறுப்புரிமை வழங்கல் போன்ற செயற்பாடுகளுக்கு நாம் எதிர்ப்பை தெரிவிப்பதுடன் அரசாங்கத்தின் சிறந்த செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பை வழங்குவோம்.

இதேவேளை கட்சியின் முன்னேற்றத்துக்காக நாம் தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றோம் இந்நிலையில் கட்சிக்குள் ஏதேனும் சிக்கல்கள் ஏற்பட்டால் அதனை சுமுகமாக தீர்க்க நடவடிக்கையை எடுப்போம். கட்சி உறுப்பினர்களுடன் மாத்திரமே கலந்துரையாடல்கள் இடம்பெற்றிருந்தன.

கேள்வி:- நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ அண்மையில் நாடாளுமன்றத்தில் சுதந்திரக் கட்சி தொடர்பில் பல்வேறு கருத்துகளை முன் வைத்து விட்டு, மறுநாள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இது தொடர்பான உங்களது கருத்து என்ன?

பதில்:- நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ வைத்தியசாலையில் ஏன் சேர்க்கப்பட்டார் என்பது தொடர்பில் எமக்குத் தெரியாது. எனினும் 2 வருடங்களுக்கு முன்னர் அவர் தெரிவித்த சில விடயங்கள் தொடர்பில் வாக்குமூலம் பெற்றுக் கொள்வதற்காகவே அவரை குற்றப் புலனாய்வுதிணைக்களத்துக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டால் இங்கு சென்று வாக்கு மூலம் வழங்குவதே சிறந்த செயற்பாடாகும். - என்றார்.

## ரிஷாத், ரியாஜ் ஆகியோரின் மனைவியர்கள் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன், அவரது சகோதரர் ரியாஜ் பதியுதீன் ஆகியோர் கைது செய்யப்பட்டமை மற்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை சட்ட விரோதமானது எனக் குறிப்பிட்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

ரிஷாத் பதியுதீனின் மனைவி, சிஹாப்தீன் ஆய்ஷா, ரியாஜ் பதியுதீனின் மனைவி பாத்திமா இஷ்ரத் ஆகியோர் சட்டத்தரணி ஆர்னல்ட் பிரியந்தன் ஊடாக இந்த முறைப்பாட்டை கடந்த செவ்வாய்க்கிழமை முன்வைத்துள்ளனர்.

கடந்த 24 ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை 3.20 மணிக்கு கொழும்பு 7, பௌத்தாலோக்க மாவத்தையில் உள்ள வீட்டில் வைத்து தனது கணவரான ரிஷாத் பதியுதீன் கைது செய்யப்பட்டார் என அவரது மனைவி முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ள நிலையில், அன்றைய தினம் அதிகாலை 1.30 மணியளவில் தனது கணவர் வெள்ளவத்தை, பெட்ரிகா வீதியில் உள்ள வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டார் என ரியாஜ் பதியுதீனின் மனைவி குறிப்பிட்டுள்ளார்.

அதன் பின்னர் அவர்கள் இருவரும் சி.ஐ.டி.யில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் எனக் குறிப்பிடும் அவ்விருவரின் மனைவிமார், ரிஷாத் மற்றும் ரியாஜ்ஜின் கைதும், தடுத்து வைத்தலும் சட்ட விரோதமானது எனக் குறிப்பிட்டுள்ளனர். அரசியல், மதம் மற்றும் இன ரீதியிலான கைது நடவடிக்கையாகவே, குறித்த இருவரின் கைதும் உள்ளது என அவர்கள் முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளனர்.

குறிப்பாக ரிஷாத் பதியுதீன், தற்கொலை குண்டுதாரி ஒருவரின் குளோசஸ் எனும் செப்புத் தொழிற்சாலைக்கு சட்ட திட்டங்களுக்கு புறம்பாக அதிக செப்பினை விநியோகம் செய்தார் என குற்றம் சுமத்தப்படும் நிலையில் அது அடிப்படையற்றது என முறைப்பாட்டாளர் ஆவணங்களையும் இணைத்து கூறியுள்ளார்.

குறிப்பாக செப்பு விநியோகம், தனது கணவர் அமைச்சராக இருந்தபோது அவரது அமைச்சின் கீழ் இடம்பெற்றாலும் அதில் அமைச்சருக்கு தலையீடு செய்ய முடியாது என முறைப்பாட்டாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி செயலகம் ஊடாக குளோசஸ் நிறுவனத்துக்கு செப்பு வழங்க முன்வைக்கப்பட்டிருந்த பரிந்துரை தொடர்பிலும் முறைப்பாட்டாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ரியாஜ் பதியுதீன் சார்பிலான முறைப்பாட்டில், அவர் ஏற்கனவே இதே குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு 6 மாதங்களுக்கு மேல் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டதன் பின்னர் சாட்சியங்கள் இல்லை என விடுவிக்கப்பட்டதாகவும் தற்போது மீளவும் அதே விடயங்களை கூறி கைது செய்யப்பட்டுள்ளதாகவும் முறைப்பாட்டாளர் கூறியுள்ளார்.

இந்நிலையில் இவ்விருவரின் கைதும் அரசியல், மத, மற்றும் இன ரீதியிலானது எனவும் அதற்கு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ரொஹான் பிரேமரத்ன, விஷேட விசாரணைப் பிரிவு இலக்கம் 3 இன் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜயசேகர உள்ளிட்டோர் பொறுப்புக் கூற வேண்டும் எனவும் முறைப்பாட்டாளர்கள் தமது முறைப்பாட்டில் கூறியுள்ளனர்.

## உயர்தரப் பெறுபேறுகள் ஒருவாரத்தில் வெளியாகும்



2020 ஆம் ஆண்டுக்கான கல்வி பொது தராதர உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் 7 நாள்களில் வெளியிடப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான அறிவிப்பை அமைச்சர் ஜி.எல் பீரிஸ் நேற்று (புதன்கிழமை) வெளியிட் டார்.

## ஓடிக்கொண்டிருந்த பஸ்ஸில் பணம், நகை என்பன திருட்டு

கொழும்பு, புறக்கோட்டை பஸ் நிலையத்தில் இருந்து அநுராதபுரம் நோக்கி பயணிக்கும் பஸ் ஒன்றில் பயணித்த யுவதி ஒருவரின் நகை திருடப்பட்டுள்ளது என பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த முறைப்பாட்டில் அருகில் இருந்த நபர் அருந்துவதற்கு பானம் ஒன்றை தந்தார் எனவும் அதன்பின் தம்புத்தேகம பகுதியில் வைத்தே கண் விழித்தேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கண் விழித்துப் பார்த்த சந்தர்ப்பத்தில் தன்னிடம் இருந்த நகை மற்றும் பணம் திருடப்பட்டிருந்ததாகவும் குறித்த யுவதி முறைப்பாடு செய்துள்ளார்.

இதன்போது ஒரு கோடியே 68 ஆயிரம் ரூபா பெறுமதியான நகை மற்றும் பணம் திருடப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு திருடியதாகக் கூறப்படும் நபர் வரகாபொல பகுதியில் வைத்து பஸ்ஸில் இருந்து இறங்கிவிட்டார் என பஸ் நடத்துநர் தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தனிமைப்படுத்தலை மீறிய 145 பேர் கைதாகினர்

கொழும்பு, ஏப்.29

கொவிட் - 19 தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக கடந்த செவ்வாய்க்கிழமை 145 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் பெரும்பாலானோர் களுத்துறை, மொனராகலை மற்றும் திருகோணமலை பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என பிரதிப் பொலிஸ்மா அதிபரும், பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் றோஹண கூறியுள்ளார்.

குறித்த குற்றச்சாட்டுக்காக கடந்த ஒக்ரோபர் 31 முதல் இதுவரையான காலப் பகுதியில் சுமார் 3 ஆயிரத்து 900 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## 25 லட்சம் ரூபா பெறுமதியிலான கொக்கெய்ன் சுங்க பிரிவால் மீட்பு

ஜமைக்காவிலிருந்து கூரியர் சேவை மூலமாக நாட்டுக்கு அனுப்பப்பட்ட கொக்கெய்ன் போதைப்பொருள்களை இலங்கை சுங்கப் பிரிவின் போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவு அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.



போதைப்பொருள் அடங்கிய இந்த பொதி, சீதுவையை தளமாகக் கொண்ட ஒரு தனியார் கூரியர் சேவை மூலம் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

ஏறக்குறைய ஒரு வாரத்திற்கு முன்னர் நாட்டுக்கு வந்த அந்த பொதி தொடர்பில் சந்தேகம் எழுந்த நிலையில், சுங்க அதிகாரிகள் அதன் பெறுநரை வரவழைத்துபொதியைச்சோதனையிட்டனர்.

இதன்போதேகுறித்தபொதியிலிருந்து கொக்கெய்ன் போதைப்பொருளின் தொகை மீட்கப்பட்டுள்ளதுடன், அவற்றின் பெறுமதி 25 லட்சம் ரூபா எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இதன்போது 44 வயதான கொழும்பு, நாரஹேன்பிட்டி பகுதியில் வசிக்கும் பொதியின் பெறுநர் சுங்க அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப் பட்டார்.

## ராஜிதவிற்கு எதிரான வழக்கு ஜூலையில் விசாரணைக்கு!

கொழும்பு, ஏப்.29

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் அரச மருந்தாக்கல் கூட்டுதாபனத்தின் முன்னாள் தலைவர் மொஹமட் ரூமி ஆகியோருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை ஜூலை மாதம் 7 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று புதன்கிழமை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தமித் தொடவத்த முன்னிலையில்விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் சர்ச்சைக்குரிய வெள்ளை வான் கடத்தல் சம்பந்தமாக ஊடக சந்திப்பு ஒன்றை நடத்தி, அதன் மூலம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீது பொய்யான குற்றச்சாட்டுக்களை சுமத்தினார் எனக் குறித்த இருவருக்கும் எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாயி பக்தரான அமரர் செ. நடேசபிள்ளை சுமார் இருபத்தியைந்து ஆண்டுகளுக்கு முன்னர் சாயி அற்புதம் தொடர்பாக எழுதிய கட்டுரையை பகவான் ஸ்ரீ சாயி பாபா மகா சமாதி அடைந்த பத்தாவது ஆண்டு நிறைவை ஒட்டி கடந்த 24 ஆம் திகதிவெளியிட்டிருந்தோம். 'சாயி பாபா சாயி நாதா' என்ற தலைப்பில் செ.நடேசபிள்ளையின் ஆக்கங்கள் அடங்கிய சாயி மகாத்மியக் கட்டுரைகள் சிவகாமி அம்மாள் பப்ளிக்கேஷன்ஸ் பிரசுரமாக 2000 ஆம் ஆண்டு சாயி ஜனன தினத்தில் வெளியானது. அதில் இடம்பெற்ற இன்னொரு கட்டுரை இது.



# கருணை உள்ளம் படைத்த வில்மா அன்னைக்கு சாயிபாபா அளித்த தரிசனம்

செ. நடேசபிள்ளை

வில்மா அம்மையார் கருணை உள்ளம் படைத்தவர். இவர் இயற்கையாகவே மற்றவர்களிடம் அன்பும் அனுதாபமும் உள்ளவர். அதனால்தானோ என்னவோ அவர் அமெரிக்காவில் வசித்துவந்த வீடு 'கருணை இல்லம்' என்று அழைக்கப்பட்டது.

அங்கு வசித்தவர்களோ ஆதரவு அற்றுத் தங்கள் இருப்பிடங்களிலிருந்து விரட்டப்பட்ட முதியோர்கள், தங்கள் சக்தியால் நடமாடமுடியாத முடங்கள், கண் இழந்தவர்கள், முக்கியமாகத் தாய்முகம் பாராதபிஞ்சு உள்ளங்கள். 270 இற்கு மேற்பட்ட சிறார்களுக்கு அபயமளித்து, பராமரித்து, வளர்த்து, அறிவூட்டி, நல்லொழுக்கத்துடன் வெளியேறச் செய்தாள் இந்த மங்கை நல்லாள்.




வில்மா, இவர்கள் அனைவருக்கும் உடன் பிறந்த சகோதரியாகவும் 'ஊனை வருத்திடும் நோய்வரின் உற்ற தாதியாவும், கவலை எய்திடும் போதினில் இதஞ் சொல்லும் நண்பனாகவும்' எல்லாவற்றிற்கும் மேலாக பால்மணம் மாறாப் பச்சிளம் பாலகருக்குத் தாய்மையை அள்ளி ஊட்டும் தாயாகவும் விளங்கினாள். நலிவுற்றோரைப் பொலிவுறச் செய்வதே தன்தலையாய கடமையென்று கருதினாள். பதிலாக அங்குள்ள நொய்ந்தவர் காட்டும் இன்முகம், இன்சொல், குழந்தைகளின் சீலத்திருமுகம், அவர்கள் உதிரும் மோகனப் புன்னகை என்பன வில்மாவை ஆனந்தக் கடலில் அமிழ்த்தின.

போர்ட்லண்ட் நகருக்கு அப்பால் பிரசித்தி அடைந்திராத கருணை இல்ல நடவடிக்கைகளைப் பல ஆயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள சாயீசன் அறிந்திருந்தார். பலனைக் கருதாது பற்றற்ற கடமைசெய்யும் இந்த நல்லாளுக்கு ஒரு செய்தி அனுப்பி வைத்தார் பகவான். அவர் செய்தி அனுப்பியவிதமும் விந்தையானது. வேறு யார்தான் இந்தமுறையைக் கையாளக் கூடும்? ஏன் அவ்வாறு அனுப்பினார் என்பதும் அவர் ஒருவருக்குத்தான் விளங்கும்.

வில்மாவிற்குத் தொலைபேசித் தொடர்பு ஒன்று வந்தது. அது மிகவும் நீண்ட தூரத்திலுள்ள இடத்திலிருந்து வந்ததாகத் தென்பட்டது. மறு பக்கத்திலிருந்த ஒரு பெண்ணின் குரல். *'கலாநிதி புறங்கி, சாயி பாபாவைச் சந்திப்பதற்காக இந்திராதேவியின் தலைமையில் இந்தியா செல்லும் குழுவில் உங்கள் பெயர் பதியப்பட்டுள்ளது. உங்கள் பிரயாணச் செலவு 2,000 டொலர்களைத் தயவுசெய்து உடன் அனுப்பிவைக்கவும்'*

வில்மா அதற்கு *'இதில் ஏதோ பிழை நடந்திருக்கிறது. இந்தியா போகும் உத்தேசம் எனக்கில்லை, இந்தச் சாயிபாபா என்பவர் யார்?'* என்றார். தொலைபேசி இணைப்பு உடன் துண்டிக்கப்பட்டது. தொலைபேசியில் கதைத்தவரின் விவரம் சொல்லப்படவில்லை.

இது ஒரு விசித்திரமான செய்தியாய் இருக்கிறது. என்னுடன் கதைத்த நபர் என்னைக் கலாநிதி என்று அல்லவோ விளித்தார். எனக்கு சர்வகலாசாலைகளோ அல்லது வேறு ஸ்தாபனங்களோ கலாநிதிப் பட்டம் அளிக்கவில்லையே!'

இந்திராதேவியைப் பற்றி வில்மா ஓர் அளவு அறிந்திருந்தார். இந்திராதேவி யோகாசனம் கற்றுக் கொடுக்கும் பிரபல ஆசிரியை. யோகமுறைகளைக் கற்றுக் கொடுப்பதற்காக உலகநாடுகளுக்கு அடிக்கடி சென்று வருவார். சாயிபாபாவைப் பற்றி வில்மா ஒன்றும் அறிந்திருக்கவில்லை. ஆகையால் பாபாவைப்பற்றி விசாரிக்கத் தொடங்கினார்.

கௌவட் மேற்பெற் (Howard Murphet) என்னும் ஆஸ்திரேலியர் எழுதிய 'சாயிபாபா' 'அற்புத மனிதர்' என்னும் நூல் வில்மாவிற்குக் கிடைத்தது. அந்தப் புத்தகத்தை வாசிக்க, இந்தியாவிற்குச் சென்று இந்த அற்புத மனிதரைச் சந்திக்க வேண்டும் என்ற தாகம் இவருக்கு ஏற்பட்டது.

தொலைபேசித் தொடர்பு ஏற்பட்டு ஒருசில நாள்கள் சென்றன. எதிர்பாராத விதமாக வில்மாவின் அளப்பரிய சேவையைப் பாராட்டும் முகமாக அரசாங்கம் இவருக்குக் கலாநிதிப் பட்டம் அளித்து கௌரவித்தது. இதனால் வில்மா, பாபாவின்மேல் வைத்த நம்பிக்கை மென்மேலும் வளர்ந்தது. இந்தியா சென்று பாபாவைத் தரிசிக்க நிறைய ஆர்வம் ஏற்படத் தொடங்கிற்று. ஆனால் சில தடைகள் அவள் முன்னின்றன. போய் வருவதற்குப் போதிய பணம் இன்மை, தன் பொறுப்புக்களை ஏற்பதற்குத் தகுதியும், போதிய அனுபவமும் உள்ளோர் கருணை இல்லத்தில் இல்லாமை என்பன அவையாகும்.

தொலைபேசியில் அன்று தீர்க்க தரிசனமாக இரண்டு விடயங்கள் வெளியிடப்பட்டன. ஒன்று வில்மா கனவிலும் எதிர்பாராத கௌரவப் பட்டம். இது நிரூபிக்கப்பட்டுவிட்டது. மற்றது இந்த மாமன்னனை இந்தியா சென்று நேரே தரிசிப்பது. அதுவும் நடந்து தீருமென்ற பூரண நம்பிக்கை வில்மாவிற்கு ஏற்பட்டது. எதற்கும் இவை பாபாவால் நடந்தன என்பதற்குத் தனக்குச் சந்தேகமுற மிகவும் தெளிவான ஓர் அடையாளம் காட்டும்படி மனதில் பாபாவை வேண்டினாள். அத்துடன் தாம் இந்தியா செல்வதற்கு எதிர்நோக்கும் தடைகளையும் நீக்க வேண்டுமென்றும் மற்றுமொரு வேண்டுகோள் விடுத்தார்.

## மோதிர அன்பளிப்பு

வில்மா விசித்திரமான பழக்கத்திற்கு ஆளாகியிருந்தாள். விரல்கள் நிறைய மோதிரங்களை அணிந்து அவற்றின் அழகை ரசிப்பது அவளின் பொழுதுபோக்கு.

சிகிச்சை இல்லத்தில் நோயாளிகளையும், குழந்தைகளையும் பராமரிக்கும்போது மோதிரங்களால் தடைகள் ஏற்படும் என்பதால், அவற்றை விரல்களினின்றும் அகற்றி ஒரு சிறுதோற்பையில் வைத்துக் கொள்வாள். தோற்பை எப்பொழுதும் தன் மேல் அங்கியின் உறையில் இருக்கும். சௌகரியம் ஏற்படும்போது மோதிரங்களை அணிந்து கொள்வாள். இந்த மோதிரங்களில் விலையில் மிகவும் குறைந்த, சாதாரண நீலக்கண்ணாடிக்கல் பதித்த மோதிரமே, வில்மாவின் மதிப்பையும், கவனத்தையும், கவர்ந்தாக இருந்தது.

கருணை இல்லத்தில் வளர்ந்து, பெரியவனாகி, வெளியேறி, நல்லொழுக்கத்துடன் வாழும் நல்லவனான ஒருவனால் நத்தார் பரிசாக அன்னை வில்மாவிற்கு வழங்கப்பட்டது அந்த மோதிரம். ஒருநாள் வில்மா தன் சிநேகிதியுடன் பேசும்படம் பார்க்கச் சென்றாள். 'வலதுகுறைந்தோரைப் பராமரிக்கும் முறைகள்' பற்றிய படம் அது. இந்தப் படத்தை வில்மா முன்பே பார்த்திருந்தாள். அதனால் படத்தில் மனம் நாடவில்லை.

விரல்களில்மோதிரங்களை அணியாமலிருப்பதை அப்பொழுது உணர்ந்தாள். தன்தோல் பையை எடுத்து பக்கத்தில காலியாக உள்ள ஆசனத்தில் வைத்து மோதிரங்களை, ஒவ்வொன்றாக அணிந்தாள். தனது மதிப்பிற்கும், பெருமைக்கும் உரிய நீலக்கண்ணாடிக் கல் மோதிரம் பையுள் காணப்படவில்லை. தான் அன்று சென்ற இடங்களை எல்லாம் நினைவுபடுத்தினாள். எங்கும் அந்த மோதிரத்தை வைத்ததாக நினைவு வரவில்லை. திரையில் ஓடும் படமும் முன்பே பார்த்தது. குழம்பிய நிலையிலுள்ள வில்மா தன் சிநேகிதியை அழைத்துக் கொண்டு கருணை இல்லத்திற்கு திரும்புவதற்கு எண்ணங் கொண்டாள்.

அப்பொழுது கொட்டகைக்குள் ஒருவித காற்று வீசிற்று. விமலாவின் தோல் பையிலிருந்து நீல ஒளிக் கதிர் பளிச்சிட்டு தோல்பைக்குள் பாய்ந்ததை வில்மா அவதானித்தாள். அவள் மனதிற்குள்ளும் *'இதோ நீ கேட்ட தெளிவான அடையாளம்'* என்ற குரல் திரும்பத் திரும்ப ஒலித்துக் கொண்டிருந்தது.

தோல்பையைச் சட்டென எடுத்து, பையுக்குள் தன் விரல்களை விட்டாள். மோதிரமொன்று இருப்பதை உணர்ந்தாள். மோதிரம் சற்றுச் சூடாக இருந்தது. மோதிரத்தை உடன் வெளியே எடுத்தாள். அந்த அரை இருட்டிலும் மோதிரத்திலுள்ள கல்லிலிருந்து பிரகாசமான நீல ஒளி கண்ணைக் கூசச் செய்தது. இதை அவதானித்த வில்மாவின் சிநேகிதி *'ஆ! இந்த மோதிரம் உங்களுக்கு எப்படிக் கிடைத்தது?'* என்று வினாவினாள். ஆச்சரியத்துடன் இருவரும் கொட்டகைக்கு வெளியேவந்து அதிசய மோதிரத்தை வெளிச்சத்தில் உற்று நோக்கினர். கல்லில் ஒளிபட்டதும் அதன் பிரகாசம் மேலும், மேலும் வளர்ந்துகொண்டே இருந்தது. வில்மா தவறிவிட்டதாகக் கருதிய அதே மோதிரத்தில் அவள் என்றுமே காணாத ஒளிவடிவம் பொருந்திய புத்தம் புதிய நீலநிறக்கல் பதிக்கப்பட்டிருந்தது. அந்த அழகிய கல்லினால் மோதிரம் பொலிவுற்று விளங்கியது.

மோதிரத்தைப் பிரசித்திபெற்ற நகைவியாபாரியிடம் காட்டிக் கல்லின் மதிப்பை அறிய ஆவலாயிருந்தனர். கல்லைப் பரிசோதித்த நகைவியாபாரி *'இது ஒரு நல்ல இனம். ஆயிரம் டொலருக்கு மேல் பெறும்'* என்று விலைமதித்தார். வில்மாவின் சிநேகிதியால் இதை நம்ப முடியவில்லை. கண்ணாடிக் கல் எவ்வாறு நவரத்தினக் கற்களில் ஒன்றாகும்? இன்னும் ஒருநகை வியாபாரியின் அபிப்பிராயத்தையும் அறிய வேண்டுமென்று அங்கு சென்றனர். வில்மா மோதிரத்தை நகைவியாபாரியிடம் கொடுக்கும்போது கல்லில் ஒருநிற பேதம் ஏற்பட்டிருந்தது. அதன் பிரகாசமும் கூடி இருந்தது. கல்லைப் பல பரிசோதனைகளுக்கு உட்படுத்திய பின் *'இது விலையுயர்ந்த நீலக்கல். இது ஆயிரத்து ஐந்நூறு டொலர்களுக்கு மேல் பெறும்'* என்றார்.

வில்மாவும், சிநேகிதியும் கருணை இல்லம் போகும் வழியில் பிறிதொரு நகை வியாபாரியையும் அணுகினர். கல்லின் நிறத்தில் அடிக்கடி மாற்றம் ஏற்படுவதையும் அவதானித்தனர்.

(11 ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈஸ்டர் குற்றவாளியை அறிந்தால் முறைப்பாடளிக்குக சந்திகளின் நின்று கூறுகின்றமை பொருத்தமற்றதாகும்

## அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய காட்டம்



உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரி யாரென எதிர்க்கட்சியினர் அறிந்திருந்தால் குற்ற விசாரணைப் பிரிவில் அல்லது பயங்கரவாதத் தடுப்பு பிரிவில் முறைப்பாடளிக்க முடியும். அதனை விடுத்து சந்திகளில் கூறிக் கொண்டிருப்பது பொருத்தமற்றது என்று அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

சந்தேகநபர்களைக் கைது செய்வதற்கும் அரசாங்கத்திற்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. பொலிஸ் , குற்ற விசாரணைப் பிரிவு, பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் என்பவையே அதனைச் செய்யும்.

இவற்றுக்கு நாம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அழுத்தம் பிரயோகிப்பதில்லை. இவற்றுக்கு சுயாதீனமாக இயங்கக் கூடிய வாய்ப்பை நாம் ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றோம்.

கடந்த காலங்களில் முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் ஏன் கைது செய்யப்படவில்லை? அவரது சகோதரர் ஏன் கைது செய்யப்படவில்லை? என எம்மிடம் கேட்கப்பட்டது.

இது அரசாங்கத்தால் எடுக்கப்படும் தீர்மானம் அல்ல. மேற்கூறிய நிறுவனங்களே அது தொடர்பில் தீர்மானிக்கும்.

நாடாளுமன்றத்தில் சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சூத்திரதாரியைக் கண்டு பிடிக்குமாறு கூச்சலிட்டுக் கொண்டிருக்கின்றனர்.

அவர்களுக்கு சூத்திரதாரியைப் பற்றித் தெரியும் என்பதே இதன் மூலம் வெளிப்படுகிறது. எனவே, குறித்த உறுப்பினர்கள் இது தொடர்பில் அறிந்திருந்தால் குற்ற விசாரணைப் பிரிவு அல்லது பயங்கரவாதத் தடுப்புப் பிரிவில் முறைப்பாடளிக்க முடியும். அதனை விடுத்து சந்திகளில் கூறிக் கொண்டிருப்பதால் எவ்வித பயனும் கிடையாது. – என்றார்.

## இரண்டாம் கட்டமாக வேறு ஊசி ஏற்றமுடியாது

### சுதர்ஷினி திட்டவட்டம்



கொவிட் தடுப்பூசியாக முதலாம் கட்டமாக அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசி ஏற்றப்பட்டவருக்கு இரண்டாம் கட்டமாக தடுப்பூசி வழங்கும்போது அஸ்ட்ராஜெனெகாவே வழங்கவேண்டும்.

வேறு தடுப்பூசிகளை வழங்க முடியாது. தடுப்பூசியை ஏற்றிக்கொள்ள மக்கள் அச்சப்படத்தேவையில்லை என இராஜாங்க அமைச்சர் விசேட வைத்திய நிபுணர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

கொவிட் தடுப்பூசி ஏற்றும் இரண்டாம் கட்ட நடவடிக்கை தாமதித்தமை தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

கொவிட் தடுப்பூசி முதலாம் கட்டமாக ஏற்றிக்கொண்டவர்களுக்கு அதன் இரண்டாம் கட்டத் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை ஏற்கனவே தெரிவிக்கப்பட்ட காலத்தையும் விட சற்று தாமதித்தே வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

அஸ்ட்ராஜெனெகா முதலாம் கட்டத் தடுப்பூசி வழங்கும்போது, அதன் இரண்டாம் கட்ட தடுப்பூசியை 4 வாரங்களுக்குள் வழங்கவேண்டும் என்றே எமக்குப் பரிந்துரை செய்யப்பட்டது.

என்றாலும் அதன் பின்னர் இடம் பெற்ற ஆய்வு முடிவுகளின் பிரகாரம் இரண்டாம் கட்ட தடுப்பூசியை 3 மாதங்கள் வரை பிற்படுத்துவதனால் அதன் மூலம் பெறப்படும் பிரயோசனம் அதிகம் என்றே தெரிவிக்கப்பட்டது.

அதன் பிரகாரமே நாங்கள் முதலாம் கட்டத் தடுப்பூசி ஏற்றி 10 முதல் 12 வாரங்களுக்குள் இரண்டாம் கட்டத் தடுப்பூசியை ஏற்றுவதற்குத் தீர்மானித்தோம்.

பின்னர் அது 12 முதல் 16 வாரங்களுக்குள் வழங்குவதன் மூலம் நோய் எதிர்ப்பு சக்தியை மேலும் அதிகரிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. அதன் பிரகாரம் நேற்று முதல் இரண்டாம் கட்ட தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுகின்றது.

அத்துடன் முதலாம் கட்டமாகக் கொவிட் தடுப்பூசியாக அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியே நாங்கள் வழங்கினோம். அவ்வாறு முதலாம் கட்டமாக அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசி ஏற்றப்பட்டவருக்கு இரண்டாம் கட்டமாக தடுப்பூசி வழங்கும்போது அஸ்ட்ராஜெனெகாவே வழங்கவேண்டும்.

வேறு தடுப்பூசிகளை வழங்க முடியாது. தற்போது எமது கைவசம் இருக்கும் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசி போதுமானதாக இல்லை.

இந்தியாவில் தற்போது ஏற்பட்டுள்ள மோசமான நிலைமையிலும் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

மேலும் அஸ்ட்ராஜெனெகாத் தடுப்பூசி ஏற்றிக்கொண்ட 3 பேர் மரணித்துள்ளனர் என அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

எந்தவொரு தடுப்பூசியை ஏற்றிக் கொண்டாலும் அதனால் பக்கவிளைவு ஏற்படலாம். என்றாலும் இந்தத் தடுப்பூசியை ஏற்றிக்கொண்டமையால் தான் அந்த மரணங்கள் ஏற்பட்டன என இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை.

இருந்தபோதும் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியைத் தொடர்ந்து வழங்குமாறு உலக சுகாதார அமைப்பும் ஐரோப்பிய மருத்துவ சங்கமும் தெரிவித்திருக்கின்றன. ஏனெனில் தடுப்பூசியைப் பெறாவிட்டால் மரணிப்பதற்கான வாய்ப்பு அதிகம். அதனால் தடுப்பூசியை ஏற்றிக்கொள்ள மக்கள் அச்சப்படத் தேவையில்லை. – என்றார்.

## வைத்தியசாலைக்குச் சென்று ஹரினைப் பார்வையிட்ட ரணில்



ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கடந்த செவ்வாய்க்கிழமை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோவைச் சந்தித்தார்.

சுமார் ஒரு மணி நேரம் இடம் பெற்ற இந்த சந்திப்பின்போது அவரைக் கைது செய்வதற்கான முயற்சிகள் தொடர்பாகப் பேசப்பட்டதாகத் தெரிய வருகின்றது. ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக ஹரின் பெர்னாண்டோவைக் கைது செய்யத் தவறிய பின்னர், கடந்த ஆட்சியின் போது ஹரின் அமைச்சில் ஏற்பட்ட பிரச்சினை தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்து அவரை கைது செய்ய அரசாங்கம் முயற்சிக்கிறது என ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

## இடியன் துப்பாக்கி வெடித்தது காயத்துடன் ஒருவர் கைது

முல்லைத்தீவு, ஏப். 28

முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குமுழமுனை கிராமத்தில் பன்றிக்கு வெடி வைப்பதற்காக இடியன் துப்பாக்கி பயன்படுத்த முற்பட்ட போது தவறுதலாக துப்பாக்கி வெடித்து காயமுற்ற நிலையில் நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில் –

முல்லைத்தீவு குமுழமுனை பிரதேசத்தின் வனப்பகுதியில் பன்றிக்கு வெடி வைப்பதற்காகச் சட்டவிரோத இடியன் துப்பாக்கியைக் கொண்டு சென்று தயார்படுத்திய போது துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் நபர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இருப்பினும் குறித்த நபர் இரகசியமாக மருந்து எடுத்துக் கொண்டு வீட்டில் இருந்த நிலையில் இந்த விடயம் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டமையைத் தொடர்ந்து முல்லைத்தீவு பொலிஸாரால் மேற்படி நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.



அந்த நபர் பயன்படுத்திய துப்பாக்கி மற்றும் அதற்குரிய குண்டு வகைகளைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளதோடு மேற்படி நபரையும் கைது செய்து விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த நிலையில் கைது செய்யப்பட்ட நபர் குமுழமுனை 6 ஆம் வட்டாரம் பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடையவர் எனத் தெரிய வருகிறது.

சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கொரோனா கூட்டு ஒத்துழைப்பை ஒருங்கிணைக்க பிராந்திய மட்ட செயற்பாட்டில் இலங்கை பங்கேற்பு




கொரோனாவுக்குப் பிரதிபலிப்பது தொடர்பாக சீனா, ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டு அமைச்சர்களுடனான கூட்டு வீடியோ மாநாட்டில் வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்தன பங்கேற்றார்.

கொவிட் – 19 இற்கான பிரதிபலிப்பு சார்ந்த ஒத்துழைப்பைப் பலப்படுத்துதல் மற்றும் தொற்றுநோய்க்குப் பிந்தைய பொருளாதார மீட்சியை ஊக்குவித்தல் மற்றும் கொவிட் – 19 தொற்றுநோயின் அண்மைய அதிகரிப்புக்கு மத்தியிலான வறுமை ஒழிப்பு ஆகியன தொடர்பில் இந்தக் கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தப்பட்டது.

தனது கருத்துக்களைத் தெரிவித்த அமைச்சர் குணவர்தன –

கொவிட் – 19 இற்குத் திறம்பட பிரதிபலிப்பதிலான ஒத்துழைப்பின் முக்கியமான தேவையை அடிக்கோடிட்டுக் காட்டினார்.

பொருளாதார மீட்சி மற்றும் கிராமப்புற வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதில் தேசிய முன்னுரிமைகளை முன்னோக்கி எடுத்துச் செல்வதற்கு நாடுகளுக்கு உதவும் வகையில், கொவிட் – 19 தொற்றுநோயால் முன்வைக்கப்படும் சவால்களை எதிர்கொள்வதன் முக்கியத்துவத்தையும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

மேலும், ஐ.நா. மற்றும் உலக சுகாதார தாபனத்தின் வழிகாட்டுதலின் கீழ், தேவைகளையுடைய நாடுகளுக்கு முக்கியமான மருத்துவ உபகரணங்கள், மருந்துகள் மற்றும் தடுப்பூசிகள் நிலையாகவும், சமமான அளவிலும் கிடைப்பதைப் பராமரிப்பதற்குத் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்கின்றமை அவசியம் என அமைச்சர் குணவர்தன மீண்டும் வலியுறுத்தினார்.

இயற்கை மற்றும் ஏனைய பேரழிவுகளின் போது அவசரத் தேவைகளை வழங்குதல், தொழில்நுட்பம் மற்றும் ஏனைய கருவிகளின் பயன்பாடு மற்றும் கிராமப்புறப் பொருளாதாரங்களில் வறுமை ஒழிப்புக்கான தளங்கள் போன்றன தொடர்பான சிக்கல்களைத் தீர்ப்பதற்கான ஒரு செயன்முறை மையமான விடயமாக அமைதல் வேண்டும் என பங்கேற்பாளர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

மன்ற உறுப்பினர் வாங் யி (சீனா), மிர்வாய்ஸ் நாப் (ஆப்கானிஸ்தான்), ஏ.கே. அப்துல் மேமன் (பங்களாதேஷ்), பிரதீப் குமார் கியாவலி (நேபாளம்) மற்றும் மக்தூம் ஷா மஹ்மூத் குரேஷி (பாகிஸ்தான்) ஆகியோர் பங்கேற்ற நாடுகளைச் சார்ந்த வெளிநாட்டு அமைச்சர்களாவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# கொரோனாவுக்கு புதிய பரீட்சிப்புக் கருவி, முகக்கவசம் அறிமுகப்படுத்திய பேராதெனிய பல்கலை ஆராய்ச்சி குழு



கண்டி, ஏப். 28

பேராதெனிய பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி குழு, புதிய கொவிட் பரீட்சிப்பு கருவி( கட்டளை) மற்றும் முகக்கவசம் என்பவற்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

நடப்பு கொவிட் பரவலுக்கு மத்தியில் அவசியமான இந்த இரண்டு உற்பத்திகளையும்சதொசநிறுவனமும் இலங்கை வியாபார பொதுக் கூட்டுத்தாபனமும் சந்தைப்படுத்துவதாக வர்த்தக அமைச்சு அறிவித்துள்ளது.

அமைச்சர் பந்துல குணவர்தன இது தொடர்பான அறிவித்தலைச் செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் வெளியிட்டுள்ளார்.

'ரெஸ்பிரினோ நனோ 99' என்ற பெயரில் புதிய முகக்கவசம் சர்வதேசச் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்படவுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது சதொசவிலும் இலங்கை வியாபாரக் கூட்டுத்தாபனத்திலும் 200 ரூபா விலைக்கு விற்பனை செய்யப்படவுள்ளது என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச அங்கீகாரம் கிடைத்ததும் இந்த உற்பத்திகள் சர்வதேசச் சந்தைக்கு அனுப்பப்படும் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார். தமது புதிய உற்பத்தியான முகக்கவசம் வைரஸ் மற்றும் பக்றீரியாவை கொல்லக்கூடும் அத்துடன் தடையற்ற சுவாசத்துக்கும் அது பிரச்சினையை ஏற்படுத்தாது என்று பேராசிரியர் உபாலி திசநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த முகக்கவசத்தை 25 தடவைகள் கழுவிப் பயன்படுத்தமுடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இதே வேளை பேராதெனிய பல்கலைக்கழக ஆராச்சிக்குழுவின் புதிய கொவிட் பரீட்சிப்பு கருவியை 1,500 ரூபாவுக்கும் குறைந்த விலையில் விற்பனை செய்ய முடியும் என்று ஆராய்ச்சியாளரான பேராசிரியர் ருச்சிக்க பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்தப் புதிய கருவி எந்தவொரு வைரஸையும் அடையாளம் காணும் தன்மைகொண்டது. இதன் மூலம் கொவிட் தொடர்பான ஆய்வு முடிவை இரண்டு மணித்தியாலங்களுக்குள் பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் குறித்த கொவிட் பரீட்சிப்பு கருவிக்கு மருத்துவ ஆராச்சிக்கழகத்தின் அனுமதி கிடைத்ததும் அது சந்தைக்கு விற்பனைக்கு வரும் என்றும் பேராசிரியர் ருச்சிக்க பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

# இளம் வர்த்தகர் ஒருவர் கொடூரமாகக் கொலை

## சந்தேகநபர் கைது

கொழும்பு புறநகர் பகுதியான தலங்கம, தலாஹேன பிரதேசத்தைச் சேர்ந்த இளம் வர்த்தகர் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். எவ்வாறாயினும், பிரதான சந்தேகநபர் அந்த பகுதியில் இருந்து தப்பிச் சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதான சந்தேகநபருக்கு உதவியதாகக் கூறப்படும் நபர் மொனராகல பகுதியிலிருந்து கொழும்பு நோக்கி திரும்பிக்கொண்டிருந்தபோது தலங்கம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதான சந்தேகநபர் கொலை செய்யப்பட்ட வர்த்தகரின் நண்பர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவத்தின் பிரதான சந்தேக நபரின் காதலி என்று கூறப்படும் பெண்ணிடம் தலங்கம பொலிஸார் வாக்குமூலம் ஒன்றைப் பதிவு செய்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, மாலபே பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட ராஜபக்ஷ முதியன்சலாகே சந்தன திலக் ராஜபக்ஷ என்ற 46 வயதான வர்த்தகரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

மாத்தளை - ரத்தோட்டை பகுதியில் உள்ள காட்டில் எரியூட்டப்பட்டிருந்த நிலையில் குறித்த வர்த்தகர் சடலமாக மீட்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# முகக் கவசம் தயாரிக்கும் தொழிற்சாலையில் 19 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று

கொவிட் வைரஸ் தொற்றில் இருந்து பாதுகாத்து கொள்வதற்காக முகக் கவசம் தயாரிக்கும் மினுவங்கொட, யட்டியனவில் அமைந்துள்ள தொழிற்சாலையில் 19 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

மினுவங்கொட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அருணரன்தெனிய இந்த விடயத்தை உறுதி செய்துள்ளார்.

அந்த தொழிற்சாலையில் 40 இற்கும் அதிகமானோர் பணியாற்றுகின்ற நிலையில் ஒரு பெண் ஊழியர் சுகவீனமடைந்துள்ளார். இதனை தொடர்ந்து 20 பேரிடம் மேற்கொள்ளப்பட்ட கொவிட் பரிசோதனையில் 19 பேருக்குத் தொற்று உறுதியாகியுள்ளது.

ஏனைய 40 பேருக்கு பரிசோதனை முடிவுகள் கிடைக்கவுள்ளன என சுகாதாரப் பரிசோதகர் குறிப்பிட்டுள்ளார். தொழிற்சாலையின் உரிமையாளரும் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளார் என உறுதியான பின்னர் நாடு முழுவதும் முகக் கவசம் அனுப்பப்படும் நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் கொட்டாவ வெளியேற்றும் பகுதி பூட்டு

அதிவேக நெடுஞ்சாலையின் கொட்டாவ வெளியேற்றும் பகுதி நேற்று காலை 6 மணி முதல் மீள அறிவிக்கும் வரையில் மூடப்படவுள்ளது.

இவ்வாறு மூடப்பட்டிருக்கும் காலப்பகுதியில் அம்புலன்ஸ் மற்றும் பஸ்கள் குறித்த வெளியேற்றத்தை பயன்படுத்த முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பகுதியில் பணியாற்றும் அதிகாரிகள் மூவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்து இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை, தெற்கு அதிவேக நெடுஞ்சாலையைப் பயன்படுத்துபவர்கள் அத்துருகிரிய மற்றும் கஹதுடுவ ஆகிய பகுதிகளில் உள்ள வெளியேற்றத்தைப் பயன்படுத்த முடியும்.

இதேவேளை, கொட்டாவ ஊடாக வாகனங்கள் உள்நுழைய முடியும் எனவும் அந்தப் பகுதியில் கட்டணம் அறவிடப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# வவுனியாவில் மோதல் மூவர் கைதாகினர்

வவுனியா, ஏப். 28

வவுனியாவில் ஈபிடிபி கட்சியினருக்கு இடையில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் மூவர் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

வவுனியா கூமாங்குளம் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஈழமக்கள் ஜனநாயக கட்சி (ஈபிடிபி) உறுப்பினர்களுக்கு இடையில் ஏற்பட்ட வாய் தர்க்கம் கைகலப்பாக மாறியதில் கட்சியின் வவுனியா மாவட்ட உதவிச் செயலாளர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ள வவுனியா பொலிஸார் தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஈபிடிபி கட்சியைச் சேர்ந்த மூன்று பேரைக் கைது செய்துள்ளமையுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# ஏழு வயதுச் சிறுவனை மோசமாக தாக்கிய தாய்

ஏழு வயதான சிறுவனை கடுமையாக தாக்கிய தாய் மற்றும் பாட்டியை பல்லேவெல பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த சிறுவனை தாக்கும் காணொளி ஒன்று வெளியாகிய நிலையில், அது தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணையைத் தொடர்ந்து கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் தாய் மற்றும் பாட்டி கைது செய்யப்பட்டனர்.

ஏழு வயதான சிறுவனை கொடூரமான முறையில் தாக்கும் தாய் ஒருவர் தொடர்பான காணொளி வெளியாகி சமூக ஊடகங்களில் வைரலாகியுள்ளது. இந்த சம்பவம் கணேகொட பகுதியில் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பகுதியில் வசிக்கும் தாய் ஒருவர் தனது ஏழு வயதான சிறுவனை கடுமையாகத் தாக்கியுள்ளார். இதன்போது குறித்த சிறுவன் 'தனக்கு பசி பசி' என கதறிய போதிலும் தாய் கடுமையாக தாக்கியுள்ளார்.

குறித்த சிறுவனை தாக்கும் காட்சியை தாக்குதலுக்கு இலக்கான சிறுவனின் சகோதரி பதிவு செய்து, பிரதேசவாசி ஒருவரின் உதவியுடன் ஊடகங்களில் வெளியிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையிலேயே, தாக்குதலை மேற்கொண்ட தாய் மற்றும் பாட்டி கைது செய்யப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் பல்லேவெல பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

## திப்பிலியின் மருத்துவப் பயன்கள்:





1. திப்பிலிப்பொடி, கடுக்காய்ப்பொடி சம அளவு எடுத்து தேன்விட்டு குழைத்து1/2 தேக்கரண்டி அளவு காலை, மாலை என இருவேளை உண்டால் இளைப்பு நோய்நீங்கும்.

2. திப்பிலிப் பொடியை பசுவின் பாலில் விட்டு காய்ச்சி அருந்தி வந்தால் இருமல், வாய்வுத் தொல்லை, மூர்ச்சை, முப்பிணி நீங்கும்.

3. திப்பிலியை பொடியாக்கி 1:2 விகிதம் வெல்லம் கலந்து உட்கொள்ள விந்து பெருகும். நெய்யுடன் கலந்து சாப்பிட ஆண்மை பெருகும்.

4. திப்பிலியை வறுத்துப் பொடியாக்கி அரை கிராம் எடுத்து தேனுடன் கலந்து 2 வேளை சாப்பிட்டு வர இருமல், தொண்டைக் கமறல், வீக்கம், பசியின்மை, தாது இழப்பு குணமாகும். இரைப்பை, ஈரல் வலுப் பெறும்.

5. திப்பிலி, மிளகு, தோல் நீக்கிய சுக்கு சம அளவாக எடுத்து வறுத்துப் பொடியாக்கி அரை கிராம் தேனுடன் கலந்து 3 வேளையாகச் சாப்பிட்டு வர வயிற்று வலி, வயிற்றுப் பொருமல், நீர்க்கோவை, தொண்டைக் கமறல் குணமாகும்.

6. திப்பிலியை இடித்துப் பொடியாக்கி 1 தேக்கரண்டியளவு எடுத்து சிறிது தேனுடன் கலந்து 2 வேளை சாப்பிட்டு வர இருமல், கபம், வாய்வு நீங்கும். செரிமானம் அதிகரிக்கும்.

7. திப்பிலி 50 கிராம், கரிசலாங்கண்ணி இலை 25 கிராம், 1/2 லிற்றர் நீரில் போட்டு நீரைச் சுண்டக் காய்ச்சிய பின் நிற்கும் திப்பிலியையும் தழையையும் இள வறுப்பாய் வறுத்துப் பொடித்த எடைக்குச் சமமாகப் பொரிப்பொடி சேர்த்து அதே அளவு சர்க்கரை கூட்டி 5 கிராம் அளவு 2 வேளை தொடர்ந்து சாப்பிட்டுவர இருமல், களைப்பு நீங்கும்.

8. திப்பிலி 10 கிராம், தேற்றான் விதை 5 கிராம் சேர்த்துப் பொடியாக்கி கழுநீரில் 5 கிராம் எடை அளவைப் போட்டு 7 நாள் காலையில் குடித்துவர வெள்ளை, பெரும்பாடு நீங்கும்.

9. திப்பிலிப் பொடி, கடுக்காய்ப் பொடி சம அளவாக எடுத்துத் தேன் விட்டுப் பிசைந்து இலந்தைப் பழ அளவு இருவேளை தொடர்ந்து 3 மாதம் சாப்பிட்டு வர இளைப்பு நோய் குணமாகும்.

10. திப்பிலிப் பொடி 10 கிராம் அரை மி.லி.பசுவின் பால் விட்டு காய்ச்சி 2 வேளை குடித்துவர இருமல், வாய்வு, மூர்ச்சை, முப்பிணி குணமாகும்.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரிஷாத்தை விடுதலை செய்யக் கோரி வவுனியாவில் கவனவீர்ப்பு போராட்டம்






வவுனியா, ஏப். 29

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி வவுனியாவில் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டம் வவுனியா மாவட்ட செயலகம் முன்னால் நேற்று புதன்கிழமை காலை 9 மணியில் இருந்து 10 மணி வரை இடம்பெற்றது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், முன்னாள் அமைச்சரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனின் கைது ஓர் அரசியல் பழிவாங்கல் எனவும், ரிஷாத் பதியுதீன், அஸாத்சாலி உள்ளிட்டவர்களை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தியும் குறித்த போராட்டம் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி இடம்பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் 'அரசுக்கு ஆதரவு வழங்காததற்காக இந்தக் கைதா?, சிறுபான்மை தலைமைகளை விடுதலை செய், அரசே உண்மையான சூத்திரதாரிகளை கைது செய், தமிழ் பேசும் உறவுகளே அநீதியான கைதுக்கு எதிராக ஒருமித்து குரல் கொடுப்போம், இன மத பாகுபாடு இன்றி பணியாற்றிய சேவகனை விடுதலை செய், ரிஷாத் பதியுதீன் - அஸாத்சாலி - ஹிஸ் புல்லா - ரிஜாஜ் பதியுதீன் அடுத்தது யார்?, ரிஷாத்தின் கைது யாரை திருப்திபடுத்த?' என எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியிருந்ததுடன், வேண்டும் வேண்டும் நீதி வேண்டும், விடுதலை செய் விடுதலை செய் ரிஷாத்தை விடுதலை செய் என கோஷமும் எழுப்பியிருந்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் வவுனியா நகரசபை உறுப்பினர்களான அப்துல் பாரி, லரீப், ரி.கே.இராஜலிங்கம் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(100)

## பஷில் ராஜபக்ஷவின் பிறந்தநாளை முன்னிட்டு மட்டக்களப்பில் மாபெரும் இரத்ததான நிகழ்வு




(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு, ஏப். 29

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஸ்தாபகரும், ஜனாதிபதி வறுமை ஒழிப்புச் செயலணியின் தலைவருமான பஸில் ராஜபக்ஷ அவர்களின் பிறந்த தினத்தினை முன்னிட்டு மட்டக்களப்பில் மாபெரும் இரத்த தான நிகழ்வொன்று நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை இடம்பெற்றது.

இரத்ததான நிகழ்வில் கட்சியின் இளைஞர் அணி உறுப்பினர்கள், மகளிர் அணி உறுப்பினர்கள் உட்பட மேலும் பல இளைஞர், யுவதிகளும் கட்சியின் ஆதரவாளர்களும் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கியிருந்தனர்.

இதன்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவின் வைத்திய அதிகாரி திருமதி.கீர்த்திகா மதனழகன் உள்ளிட்ட தாதிய உத்தியோகத்தர்கள் குறித்த நிகழ்வுக்கு வருகை தந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு தட்டுப்பாடு நிலவும் குருதிக்கொடையை பெற்றுக்கொண்டார்கள்.

## வவுனியா செட்டிகுளத்தில் ஒருவருக்குக் கொரோனா

வவுனியா, ஏப். 29

வவுனியா செட்டிகுளம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட ஒருவருக்கு கொரோனாத் தொற்று கடந்த செவ்வாய்க்கிழமை இரவு உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியா செட்டிகுளம் குருக்கள் புதுக்குளம் பகுதியைச் சேர்ந்த நபரொருவர் சுகவீனம் காரணமாக செட்டிகுளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவரிடம் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

குறித்த பி.சி.ஆர்.பரிசோதனை முடிவுகள் செவ்வாய்க்கிழமை இரவு வெளியாகிய நிலையில் மேற்படி நபருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது. இதனையடுத்து அந்த நபரை கொரோனாச் சிகிச்சை மையத்திற்கு அனுப்புவதற்குரிய நடவடிக்கையையும் அவருடன் தொடர்புடைய நபர்களை தனிமைப்படுத்தும் நடவடிக்கையிலும் சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர்.

## இலங்கையர் உள்ளிட்டவர்களுக்கு கட்டாருக்குச் செல்ல கட்டுப்பாடுகள்

இலங்கையர்கள் உள்ளிட்ட பல நாடுகளைச் சேர்ந்தவர்கள் கட்டார் நாட்டுக்குள் பிரவேசிக்க பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இந்தியா, நேபாளம், பங்களாதேஷ், பாகிஸ்தான், இலங்கை மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து வரும் பயணிகள் தொடர்பில் கட்டார் பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதன்படி, குறித்த நாடுகளில் இருந்து வரும் பயணிகள் கொவிட் – 19 தடுப்பூசி செலுத்தியிருந்தாலும் கட்டாய தனிமைப்படுத்தலைக் கட்டார் அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது.

இந்தியாவில் புதிய கொவிட் வைரஸின் பரவல் காரணமாக இந்த புதிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என கட்டாரி பொதுச் சுகாதார அமைச்சகம் அறிக்கை ஒன்றின் ஊடாக இதனைக் கூறியுள்ளது.

இதன்படி, மேற்படி நாடுகளில் இருந்து கட்டார் வரும் அனைவருக்கும் கட்டாய தனிமைப்படுத்தல் அவசியமானது என வலியுறுத்தப்பட்டுள்ளது. குறித்த நாடுகளில் இருந்து வரும் பயணிகள் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

அத்துடன் பயணிகள் புறப்படுவதற்கு 48 மணி நேரத்துக்கு முன்னர் உள்ளூர் சோதனை மையங்களில் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். செல்லுபடியாகும் பி.சி.ஆர் சான்றிதழ் இல்லாமல் யாரும் கட்டாருக்கு விமானத்தில் ஏற முடியாது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## யாழில் வாள் வெட்டு இருவர் படுகாயம்

யாழ்ப்பாணம் - மந்திரிமனை கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட வாள்வெட்டுத் தாக்குதலில் இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த வாள்வெட்டுச் சம்பவம் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருகையில் -

மோட்டார் சைக்கிளில் வருகை தந்தவர்களே ஆயுதங்களால் தாக்கியனர் என சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை அச்சுவேலி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் யாழ்.தென்மராட்சி கெற்பேலி பகுதியில் இடம்பெற்ற தாக்குதலில் இளைஞர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

தாக்குதலுக்கு இலக்கான 25 வயதான இளைஞர் காயங்களுடன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் ஒருவரைக் கொடிகாமம் பொலிஸார் கைது செய்துள்ளதுடன், மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

## வீதியை விட்டு விலகிய முச்சக்கரவண்டி கணவன் மனைவி இருவரும் படுகாயம்

(அப்துல் சலாம் யாசீம்)

திருகோணமலை - ஹொரவப்பொத்தான பிரதான வீதியில் பம்மதவாச்சி பகுதியில் நேற்று முன்தினம் முற்பகல் முச்சக்கரவண்டியொன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் கணவனும், மனைவியும் படுகாயமடைந்துள்ளனர்.

குறித்த விபத்தில் சிக்கிய இருவரும் திருகோணமலை வைத்தியசாலையில் சிகிச்சைப்பெற்றுவருகின்றனர்.

கிண்ணியாவில் இருந்து மன்னார் நோக்கிச் சென்றுகொண்டிருந்த முச்சக்கரவண்டியே இவ்வாறு விபத்துக்குள்ளானதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. இவ்விபத்தில் மன்னார் - எருக்கலம்பிட்டி - புதுக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த எம்.ஐ.எம்.பர்ஜுன் மற்றும் அவரது மனைவி ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# கொரோனாத் தொற்று மீண்டும் உச்சமடைய கோட்டா அரசின் அசமந்தப்போக்கே காரணம்

## ஜே.வி.பியின் எம்.பி. விஜித ஹேரத் பகிரங்கக் குற்றச்சாட்டு



இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று விவகாரத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு சரியானகவனம்செலுத்தத்தவறியமைால் மீண்டும் தொற்று அதிகரித்துள்ளது என மக்கள் விடுதலை முன்னணி குற்றஞ்சாட்டியுள்ளது.

பி.சி.ஆர். பரிசோதனைகளை அரசு குறைத்திருந்தது எனவும், இதன் விளைவாக அடையாளம் காணப்படும் கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை வீழ்ச்சியைக் காட்டியிருந்தது எனவும் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் சுட்டிக்காட்டினார்.

சமீபத்திய பி.சி.ஆர். பரிசோதனை மூலம், கிராமப்புறங்கள் உட்பட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் கணிசமான எண்ணிக்கையிலான நோயாளிகள் அடையாளம் காணப்படுகின்றனர் எனவும் அவர் கூறினார்.

கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடகசந்திப்பில் பேசிய அவர், கொரோனா வைரஸ் தொடர்பான இறப்புகளும் அதிகரித்து வருவதால் ஆபத்தான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது எனவும் எச்சரிக்கை விடுத்தார்.

கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை குறைந்துவிட்டன என அரசு கூறியதாலேயே பொதுமக்களும் கொரோனா குறித்த அச்சத்தைத் தணித்து, நிதானமாகப் பயணிக்கத் தொடங்கினர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடியான சூழ்நிலையை இலகுவாக எடுத்துக்கொள்ள முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாமையால் ஆலய நிர்வாகத்தினருக்கு எதிராக நடவடிக்கை

## பக்தர்கள் உள்ளிட்ட பலர் தனிமைப்படுத்தல்

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட கோண்டாவில் நெட்டிலிப்பாய் பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்ற தேர்த் திருவிழாவில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாது பக்தர்கள் நடந்துகொண்டமையால் ஆலய நிர்வாகத்தினர் மற்றும் கலந்துகொண்ட மக்கள் எனப் பலர் அடையாளம் காணப்பட்டு தனிமைப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், யாழ்ப்பாண மாவட்டத்தின் பல பகுதிகளிலும் ஆலயங்களின் திருவிழாக்கள் இடம்பெற்று வரும் நிலையில் அங்கும் பெரும்பாலானவர்கள் உரிய முறையில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதில்லை எனக் கூறப்படுகின்றது. அதனால் கொரோனாத் தொற்று அதிகளவில் மக்கள் மத்தியில் ஊடுருவும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், யாழ்.மாவட்டத்தில் வழிபாட்டுத்தலங்களில் சுகாதார நடைமுறைகள் உரிய முறையில் பின்பற்றப்படாமை கவலையளிக்கிறது என யாழ்.மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

வழிபாட்டு இடங்களில் 50 பேருக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்ட நிலையில் யாழ். மாவட்டத்தில் வழிபாட்டு இடங்களில் இந்த நடைமுறையைப் பொது மக்கள் அனுசரித்துச் செல்லவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயங்களை ஆலய பரிபாலன சபையினர் மற்றும் ஆலய நிர்வாகத்தினர் கண்காணித்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும். மேலும், வழிபாட்டு இடங்களில் இறுக்கமான நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டியது அவசியமானது எனவும் யாழ். மாவட்ட அரச அதிபர் மேலும் கூறினார்.

# சீனப் பாதுகாப்பு அமைச்சர் கோட்டாவுடன் நேரில் பேச்சு



இலங்கை வந்துள்ள சீனப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் வெய் ஃபெங், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை நேரில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

கொழும்பிலுள்ள ஜனாதிபதி செயலகத்தில் இன்று இந்தச் சந்திப்பு இடம்பெற்றது என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சந்திப்பின்போது இரு நாடுகளுக்கும் இடையிலான அரசியல், பொருளாதார மற்றும் கலாசார உறவுகள் உள்ளிட்ட விடயங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டுள்ளன.

ஜனாதிபதிக்கும் தனக்கும் இடையிலான இரு தரப்பு கலந்துரையாடல் மிகவும் பயனுள்ளதாக அமைந்திருந்தது எனச் சீனப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதேபோன்று இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் இந்த விஜயத்தின் மூலம் பலமடைந்திருக்கின்றது எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

சீனப் பாதுகாப்பு அமைச்சர் இரண்டு நாள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு நேற்றிரவு இலங்கை வந்தார்.

இன்று முற்பகல் ஜனாதிபதியைச் சந்தித்த அவர், இன்று மாலை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்திக்கவுள்ளார்.


# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
18 - 02 - 1941



மறைவு
28 - 04 - 2021

கல்வி அமைச்சின் செயலாளர்
திரு.இ.இளங்கோவன் அவர்களின் பாசமிகு தாயார்

அமரர் **இலட்சுமணன் மகேஸ்வரி**

*மீளாத்துயரில் கொண்டு எம்மை*
*ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றீரோ?*
*கலையாத நினைவுகளுடன்*
*உதிரும் கண்ணீர்*
*பூக்களால் அர்ச்சித்து உங்கள்*
*ஆத்மா சாந்தியடைய*
*எங்கள் கண்ணீர்த் துளிகளைக்*
*காணிக்கையாக்குகின்றோம்.*

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அனைத்து உள்ளங்களிற்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

**துயரில் பங்கு கொள்ளும்**
**'ஆறுதல்' சமூகத்தினர்**


# துணைவேந்தருக்கு இருதய சத்திரசிகிச்சை



யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் கலாநிதி ஸ்ரீ சற்குண ராஜாவுக்கு யாழ் ஆஸ்பத்திரியில் செவ்வாய் வெற்றிகரமாக இருதய சத்திர சிகிச்சை மேற் கொள்ளப்பட்டது.

அந்த சிகிச்சை குறித்து வைத்திய வட்டாரங்கள் முழுத் திருப்தி தெரிவித்தன.

யாழ் போதனா ஆஸ்பத்திரி இருதய சிகிச்சை மருத்துவ நிபுணர்களுடன் கொழும்பில் இருந்து வருகை தந்த விசேட வைத்தியநிபுணரும்இணைந்து இந்த சத்திரசிகிச்சையை மேற்கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

அவரது இருதயத்தில் மூன்று இடங்களில் இரத்தக் குழாய்களில் அடைப்பு நீக்கி சுருளிகள் (Stents) இந்த சிகிச்சையின் போது பொருத்தப்பட்டன எனத் தெரியவந்தது.

# மே தினப் பேரணியை ஒன்லைனில் நடத்த ஜே.வி.பி. தீர்மானம்

கொழும்பு, ஏப்ரல் 28

இலங்கையில் தற்போதுள்ள கொரோனாத் தொற்று நிலைமை காரணமாக மே தினப் பேரணிகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், ஜே.வி.பி. தனது மே தின நிகழ்வுகளை ஒன்லைனில் நடத்த முடிவு செய்துள் ளது.

கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், எதிர்வரும் சனிக்கிழமை காலை 10 மணிக்கு ஒன்லைன் மூலம் மே தினப் பேரணி இடம்பெறும் எனக் கூறினார்.

உழைக்கும் சமூகத்துக்காகவும், அடக்குமுறையை மேற்கொள்ளும் தலைவர்களிடமிருந்து தங்கள் உரிமைகளை கோருவதற்காகவும் மே தினம் நினைவு கூரப்படுகின்றது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசை விமர்சிப்பவர்களைக் கைது செய்வதை விடுத்து கொரோனாவைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குக!

## ராஜித ஜனாதிபதிக்கு 'அட்வைஸ்'



அரசாங்கத்தை விமர்சிக்கின்றவர்களைக் கைது செய்வத்தை நிறுத்திவிட்டு கொரோனா வைரஸ் தொற்று பரவலைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான சிறந்த செயற்றிட்டங்களை முன்னெடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது ராஜித சேனாரத்ன மேலும் கூறியுள்ளவை வருமாறு –

'கொரோனா வைரஸ் தொற்றுத் தொடர்பான அறிகுறிகள் ஏற்படாமல், நிமோனியா நிலைமையே பெரும்பாலானோருக்கு ஏற்படுகின்றமை தற்போது கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இந்நிலையில் மேலதிகமான செயற்கை சுவாச கருவிகள் இதுவரை அரசாங்கத்தால் கொள்வனவு செய்யப்படவில்லை.

இதேவேளை பெரும்பாலான மாவட்டங்களில் கொவிட் தடுப்பிற்கான மத்திய நிலையமும் அமைக்கப்படவில்லை.

இதற்கிடையில் ஜனாதிபதி, கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு தடுப்பூசியே தீர்வென்று தெரிவித்திருந்தார். ஆனால் தடுப்பூசிகளைக் கொண்டு வருவது தொடர்பாக சிறந்த வேலைத் திட்டம் எவையும் முன்னெடுக்கப்படவில்லை.

இத்தகைய சூழ்நிலையில் அரசாங்கம், தங்களை விமர்சிப்பவர்களைக் கைது செய்வதில் மாத்திரமே அதிக கவனம் செலுத்தி வருகின்றது.

எனவே இத்தகைய செயற்பாடுகளை விடுத்து அனைத்துக் கட்சிகளுடன் ஒன்றிணைந்து கலந்துரையாடி, கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்பாட்டுக்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்' என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## அனைத்து வைத்தியசாலைகளுக்கும் தேவையான ஒக்சிஜன் 6 மாதத்துக்குக் கையிருப்பில் உள்ளது

நாட்டிலுள்ள அனைத்து வைத்தியசாலைகளுக்கும் தேவையான ஒக்சிஜன், 6 மாதங்களுக்கு கையிருப்பில் உள்ளது என ஒக்சிஜனை விநியோகிக்கும் பிரதான நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

களுபோவில வைத்தியசாலையில் ஒக்சிஜன் பற்றாக்குறை இருப்பதாகவும் நோயாளிகளின் உயிருக்கு ஆபத்து இருப்பதாகவும் வெளியான செய்தி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில் இந்தத் தகவலில் உண்மையில்லை என சுகாதார அமைச்சு தெரிவித்திருந்தது.

மேலும் எவ்வளவு காலத்துக்கு ஒக்சிஜன் கையிருப்பில் இருக்கின்றது என்பது தொடர்பாக ஆராய்ந்து உடனடியாக அறிவிக்குமாறு ஒக்சிஜனை விநியோகிக்கும் பிரதான நிறுவனங்களுக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன அறிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே ஒக்சிஜனை விநியோகிக்கும் பிரதான நிறுவனங்கள், ஒக்சிஜன் 6 மாதங்களுக்கு கையிருப்பில் உள்ளன எனத் தற்போது அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவில் இருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாவட்டத்தில் கொரோனா தொற்று அபாயத்தில் இருந்து மக்களை பாதுகாப்பது தொடர்பான விசேட ஆலோசனைக் கூட்டம் நேற்று புதன்கிழமை மாலை 4 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது. அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இத்தகவலை அவர் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த சில தினங்களுக்கு முன்னர் இந்தியாவில் இருந்து சட்டவிரோதமான முறையில் கடல் மார்க்கமாக தலைமன்னார் பகுதிக்கு வந்த 4 நபர்களை கடற்படையினர் கைது செய்திருந்தனர்.

அவர்களுக்கு பீ.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்ட போது அவர்களில் ஒருவருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லும் போது இந்திய மீனவர்களுடன் தொடர்பை ஏற்படுத்தி வருகின்றனர் எனத் தகவல்கள் கிடைக்கின்றன என்று குறித்த கலந்துரையாடலில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மீனவர்களுக்கு உரிய ஆலோசனைகளையும், விழிர்ப்புணர்வையும் வழங்க முடிவு செய்துள்ளோம்.

மீனவர்களின் கிராமங்களுக்குச் சென்று கொரோனா தொற்று தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்குவதுடன் இந்தியாவில் தற்போது ஏற்பட்டுள்ள மிக பாரதூரமான சூழல் பற்றி அவர்களுக்கு தெளிவுபடுத்துவது குறித்தும் அந்தத் தொற்று எமது மாவட்டத்தில் ஊடாக இலங்கைக்குள் நுழையாத வகையில் தடுத்து நிறுத்தவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

எனவே பொது மக்கள் சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளை உரிய முறையில் பின் பற்ற வேண்டும் என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மேல் மேலும் தெரிவித்துள்ளார்.

## எந்தச் சந்தர்ப்பத்திலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேற்கொண்டுள்ள சீனப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் வெய் ஃபெங், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் நேற்று மாலை சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின்போது, கொரோனாத் தொற்று நோய்க்கு மத்தியில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டமைக்காக சீனப் பாதுகாப்பு அமைச்சருக்குப் பாராட்டுக்களை தெரிவித்த பிரதமர் மேலும் கூறுகையில் –

கொரோனாத் தொற்று நோய் நிலைமை இருந்தபோதிலும், உயர் மட்ட சீன அதிகாரிகள் பல சந்தர்ப்பங்களில் இலங்கைக்குப் பயணம் செய்தனர். எங்கள் வலுவான மற்றும் நட்பு இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த உங்கள் வருகை மற்றும் சந்திப்பை எதிர்பார்க்கின்றேன்.

இந்த ஆண்டு சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 100 ஆவது ஆண்டு விழாவுக்கும் அதன் அனைத்து சாதனைகளுக்கும் எனது அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். அது உண்மையில் மிக முக்கியமான மைல்கல் ஆகும்.

வறுமையை ஒழிப்பதில் சீனா செய்த சாதனைகளுக்கும் பாராட்டுக்களைத் தெரிவிக்க வேண்டும். சீன அரசு கிட்டத்தட்ட 100 மில்லியன் கிராமப்புற மக்களை வறுமையிலிருந்து உயர்த்தியுள்ளது. மறுபுறம், வறுமையை ஒழிப்பதற்காக 10 ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவின் உலகளாவிய நிலையான அபிவிருத்தி இலக்குகளை சீனா சந்திக்க முழந்தது. இது ஒரு பெரிய சாதனை.

இந்தத் தொற்று நோயைத் தடுப்பதற்கான ஒரே வழி தடுப்பூசி மட்டுமே என்பது இப்போது உலகம் முழுவதும் தெளிவாகியுள்ளது.

கொரோனாத் தொற்று நோய் வெடித்ததிலிருந்து, அனைத்து இலங்கையர்களுக்கும் சீனா தாராளமாக 6 இலட்சம் சினோஃபார்ம் தடுப்பூசிகளையும், சுகாதார உபகரணங்களையும் நன்கொடையாக வழங்கியமைக்கு நன்றி.

எனினும், இந்தத் தொற்றுநோயைக் கையாள்வதில் சீன அரசின் தொடர்ச்சியான ஆதரவை நாம் எதிர்பார்க்கின்றோம்.

கடந்த சில நாள்களாக கொரோனா நோயாளர்களது எண்ணிக்கை நாட்டில் அதிகரித்துள்ள போதிலும், பொருளாதாரம் மற்றும் சமூகத் தாக்கத்தால் முழு நாட்டையும் முடக்க வேண்டாம் என்று ஒரு அரசாக நாங்கள் முடிவு எடுத்துள்ளோம்.

தொற்று நோய்க்குப் பிந்தைய நிலைமையை நிவர்த்தி செய்ய இன்னும் பலவற்றைச் செய்ய வேண்டும்.

தற்போது, உலகெங்கிலும் இருந்து இலங்கைக்கு முதலீட்டை ஈர்ப்பதே எங்கள் முன்னுரிமை. இலங்கையில் இது போன்ற முதலீட்டாளர்களின் நம்பிக்கையை வளர்ப்பதில் உங்கள் ஆதரவை எதிர்பார்க்கின்றேன்.

தற்போதுள்ள ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கும், தொற்று நோயால் ஏற்படும் சவால்களைச் சமாளிக்க உங்களுடன் மற்றும் உங்கள் அரசுடன் நெருக்கமாக பணியாற்றுவதற்கும் எதிர்பார்க்கின்றேன் – என்றார்.

இந்தச் சந்திப்பில் சீனத் தூதுக் குழுவினரும், அமைச்சர்களான ஜி.எல். பீரிஸ், தினேஷ் குணவர்தன, சமல் ராஜபக்ஷ, சரத் வீரசேகர உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

## கருணை உள்ளம் படைத்த...

(06 ஆம் பக்கத் தொடர்ச்சி..)

'இது வைரக்கல். கை தேர்ந்த ஒரு தொழிலாளியால் மிகவும் திறம்பட வெட்டப்பட்டுள்ளது. ஆயிரத்து ஐந்நூறு டொலர்களுக்கு மேல் மதிக்கலாம்' என்றார்.

பாபாவின்மேல் பூரண நம்பிக்கை வில்மாவிற்கு ஏற்பட்டது. அன்று முதல் அவளுக்கு அவரின் நினைவாகவே இருந்தது. அவரை நேரில் கண்டு வணங்கி, அவரின் ஆசீர்வாதத்தைப் பெறத் துடித்தாள். சாயீசன் தன் தடைகளை அகற்றிக் கூடிய சீக்கிரம் தனக்குப் பிரசாந்தி நிலையத்தில் தரிசனம் அளிப்பார் என்று திடமாக நம்பியிருந்தாள்.

கருணை இல்லத்தில் வியாதியால் பீடிக்கப்பட்டு வில்மாவின் பராமரிப்பால் சுகப்பட்டு வெளியேறியவர்கள் அநேகர். அவர்கள் தங்கள் வணக்கத்தையும் மரியாதையையும் செலுத்துவதற்கு அங்கு அடிக்கடி வருவார்கள். இந்த வகுப்பைச் சேர்ந்த இரண்டு சிநேகிதர்கள் ஒருபிற்பகல் வில்மாவைச் சந்திக்க வந்தார்கள். அவர்களை அன்புடன் வரவேற்று அமரவைத்தாள்.

அவர்களில் ஒருவர் *'அம்மா, கருணை இல்லத்தில் வைத்தியத்திற்கும், பராமரிப்பிற்கும் சேர்க்கப்படுபவர்கள் எவரிடமும் நீங்கள் கால் அணா கூட ஏற்பதில்லை என்று எங்களுக்கு நன்கு விளங்கும். ஆனால் நாங்கள் இருவரும் ஈராயிரம் டொலர் கொண்டுவந்துள்ளோம். இப்போது உங்கள் செலவிற்குப் பணம் தட்டுப்பாடு இருப்பதுபோல் நாங்கள் விளங்குகிறோம். ஆகையால் இந்தப் பணத்தைத் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும். இதை நாங்கள் நன்கொடையாக உங்களுக்கு வழங்கவில்லை. உங்களுக்கு எப்போது தர முடியுமோ அப்போது நாங்கள் பெற்றுக் கொள்கிறோம். வட்டி என்ற பேச்சுக்கே இடமில்லை. உங்கள் பராமரிப்பில் நாங்கள் இருவரும் நல்ல திடகாத்திரமாக வாழ்கிறோம். பணத்திற்கும் தட்டுப்பாடில்லை.'* – என்றார்.

தொலைபேசியில் குறிப்பிட்ட தெகையும் ஈராயிரம் டொலர்கள். இவர்கள் கொண்டு வந்ததும் அதே தொகை. அவர்களிடம் பணத்தைப் பெற விருப்பம் இல்லாவிட்டாலும் இது பாபாவின் செயலாக இருக்கும் என்று எண்ணி அவர்களிடமிருந்து அந்தத் தொகையைப் பெற்றாள். இந்தியாவால் திரும்பியதும் பணத்தைத் திருப்பிக் கொடுக்க ஏற்பாடுகளும் செய்தாள்.

வில்மாவிற்கு ஏகப்பட்ட சந்தோஷம். இந்திராதேவியின் கோஷ்டியில் சேர்ந்து பிரசாந்தி நிலையம் வந்து சேர்ந்தாள். வில்மா எதிர்பார்த்த அந்த அற்புத நாளும் வந்தது. பாபாவின் தரிசனத்திற்காக நூற்றுக்கணக்கான பக்தர்களுடன் பிரசாந்தி நிலைய முன்றிலில் அமர்ந்திருந்தாள்.

பாபா வரும்நேரம் ஏதோ ஒருதெய்வீக சூழலில் தானிருப்பதாக உணர்ந்தாள். பாபா தன்பால் சொரியும் கருணையை நினைந்து நினைந்து மனம் உருகினாள். ஆயிரமாயிரம் மைல்களுக்கு அப்பால் விலாசமே தெரியாத முக்கியமற்றிருந்த தன்னைத் தொலைபேசியில் தொடர்பு ஏற்படுத்திப் பின்பு பல சிரமங்களை எல்லாம் வெகுஇலகுவாகக் களைந்து தன்விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் பொருட்டு பிரசாந்தி நிலையத்தின் முன் நிறுத்தி வைத்திருக்கும் சாயீசனைத் தரிசிக்க வில்மாவின் கண்கள் ஏங்கித் தவித்தன.

பாபாவும் அவள் முன் வந்து நின்றார். அவரின் தெய்வீக அழகைப் பார்த்துப் பார்த்து உளங்குளிரக் களித்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தாள். பாபா வில்மாவைப் புன்சிரிப்புடன் பார்த்துக் கண்ணை இமைத்து *'மோதிரம் பிடித்துக் கொண்டதா?'* என்றார். வில்மா சொல்ல முடியாத பரவசநிலையை எய்தினாள்.

**(ஹொவர்ட் மேர்பெட் நூலைத் தழுவி எழுதிய ஆக்கம்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுமக்கள் பொறுப்பற்று செயற்பட்டால் இறுக்கமான கட்டுப்பாடுகள் விதிக்கப்படும்

கொவிட் தொற்று காரணமாக வேறுநாடுகளில் ஏற்பட்டமை போன்ற நிலைமை இங்கு ஏற்பட இடமளிக்க முடியாது என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அத்துடன், பொதுமக்கள் தமது பொறுப்பை உணர்ந்து செயற்படத் தவறினால் கடுமையான கட்டுப்பாடுகளைக் கொண்டுவர நேரிடலாம் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசிய அவர் இதனைத் தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், 'மக்களை முடிந்தளவு அறிவூட்டி பாதுகாப்பு வழிமுறைகளைக் கட்டாயம் பின்பற்றுமாறு கோர வேண்டும்.

பலமான பலநாடுகளுக்கு ஏற்பட்டது போன்ற நிலை ஏற்பட இடமளிக்கக் கூடாது. திருமண நிகழ்வுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டாலும் பொதுமக்கள் தமது பொறுப்புகளை உணர்ந்து செயற்பட வேண்டும். தவறினால் அதற்கும் மீள சட்ட திட்டங்களைக் கொண்டுவர நேரிடும்.

மக்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும். நீங்கள் பாதுகாப்பாக இருந்தால் முழு நாடும் பாதுகாக்கப்படும். 30 ஆம் திகதி வரை பாடசாலைகளை மூட முடிவு செய்யப்பட்டுள்ளது. போக்குவரத்துத் துறை தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

சட்டங்கள் ஊடாக கட்டுப்பாடுகளை விதிக்காது பொது மக்களிடம் விடுக்கும் கோரிக்கைகளுக்கு அவர்கள் செவிசாய்க்காவிட்டால் சட்டதிட்டங்களைக் கொண்டுவர நேரிடும். அதற்கு நாம் பின்நிற்க மாட்டோம். – என்றார்.

இதேவேளை, போதுமான அளவு அவசர சிகிச்சை கட்டில்கள் உள்ளன. அது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. சில பிரதேசங்களில் குறைபாடுகள் காணப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், பொதுமக்கள் கட்டுப்பாட்டுடன் செயற்படுவார்கள் என நம்பினோம். கடந்த வருடமும் புத்தாண்டை கொண்டாட முடியாமல் போனதால் இம்முறை இடமளிக்கப்பட்டது.



மக்கள் புத்திசாலித்தனமாக செயற்படுவார்கள் என எதிர்பார்த்தோம். ஆனால் அவ்வாறு நடக்கவில்லை. புத்தாண்டுக்கு முன்னர் கட்டுப்பாடுகளை விதித்திருந்தால் இதனை விட நிலைமையை கட்டுப்படுத்தியிருக்கலாம் என அவர் மேலும் கூறியுள்ளார்.

## ஜூலையில் நாடாளுமன்றம் வருகிறார் ரணில்



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக ஜூலை மாதம் பதவியேற்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு ரணில் விக்கிரமசிங்கவை நியமிக்க கட்சியின் உத்தியோகபூர்வ மட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது என கட்சியின் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

தற்போதைய நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் உறுப்பினர் பதவிக்கு ரணில் விக்கிரமசிங்கவை விட பொருத்தமானவர் யாரும் இல்லை என்று கட்சி மூத்தவர்கள் ஒருமனதாக முடிவுசெய்துள்ளனர்.

கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி படுதோல்வியைச் சந்தித்திருந்த நிலையில், ஒரேயொரு தேசியப் பட்டியல் ஆசனம் மட்டும் கிடைத்திருந்தது.

இந்நிலையிலேயே, ரணில் விக்கிரமசிங்க தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக ஜூலை மாதம் பதவியேற்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தனிமைப்படுத்தல் விதிகளைக் கடைப்பிடிக்காத பயணிகளுக்கு நோர்வூட்டில் கடும் எச்சரிக்கை

நோர்வூட் நகர் உள்ளிட்ட இடங்கள் நோர்வூட் பொலிஸாரால் கடந்த செவ்வாய்க்கிழமை திடீர் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளது.

நகரிலுள்ள கடைகள் மற்றும் பொது இடங்கள் இவ்வாறு பொலிஸாரால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இதன் போது பொகவந்தலாவையில் இருந்து ஹற்றன் நோக்கி வந்த பஸ் ஒன்று பொலிஸாரால் கடுமையான சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளது.

இதன்போது பஸ்ஸில் இருந்த பயணிகள் யாவரும் கீழே இறக்கப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

அப்போது முகக்கவசம் அணியாமலும், சமூக இடைவெளியை பேணாமலும் வந்த பயணிகள் கடுமையாக எச்சரிக்கப்பட்டமையுடன், சிலர் நோர்வூட் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

மேலும் சுகாதார வழிகாட்டல்களை மீறி பயணிகளை ஏற்றி வந்த பஸ்ஸின் சாரதியும், நடத்துநரும் கடுமையாக எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

ஹற்றன் பகுதியில் நேற்றும் ஆங்காங்கே கொவிட் 19 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## பூநகரி பிரதேச கிராஞ்சி கடலுக்குள் தொடர்ச்சியாக மீன்பிடிக்கத் தடை

பூநகரி பிரதேச சபைக்குட்பட்ட கிராஞ்சி கடலுக்குள் தொடர்ச்சியாக மீன் பிடிக்குச் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது என கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தமது பூர்விகமாக கிராஞ்சி கடலையே தொழிலுக்காக கொண்டுள்ளனர். இந்நிலையில் தற்போது புதிதாக நியமிக்கப்பட்டுள்ள கடற்படை அதிகாரி ஒருவர் கிராஞ்சி கடல் தொழிலாளர்களை தொழிலுக்குச் செல்ல முடியாமல் தடுத்துள்ளார்.

தமது வாழ்வாதாரமாகக் கடல் தொழிலையே நம்பி வாழ்கின்ற நிலையில் கடந்த சில நாள்களாக தம்மை மீன்பிடி தொழிலுக்குச் செல்வதைத் தடுத்துள்ளனர்.

குறித்த கடற்படை அதிகாரியால் சில வருடங்களுக்கு முன் நாம் தாக்கப்பட்டிருந்த நிலையில் பின் மக்களின் வேண்டுகோளுக்கிணங்க அவரை மாற்றம் செய்து பொது மன்னிப்பும் வழங்கப்பட்டிருந்தது.

அதன் பின் தாம் இதுவரை காலமும் நிம்மதியாகத் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர் எனவும் தற்போது மீண்டும் அவரை தமது கிராஞ்சி கடற்பரப்புக்குப் பொறுப்பு வாய்ந்த அதிகாரியாக நியமித்தமையால் மீண்டும் தமக்குப் பிரச்சினை வந்துள்ளது எனத் தெரிவிக்கின்றனர்.

கடல் தொழில் செய்வதற்கு தம்மிடம் முழுமையான ஆதாரம் இருந்த போதிலும் கூட சிறுபிள்ளைத்தனமான காரணங்களைக் காட்டி தம்மைத் தொழிலில் ஈடுபடாமல் தடுத்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளனர்.

மேலும் தம்மை அடிமைகள் போல் நடத்துகிறார் எனவும் தகாத வார்த்தைப் பிரயோகங்கள் பேசுகிறார் எனவும் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் எடுத்து தம்மைத் தொழிலுக்குச் செல்ல அனுமதிக்குமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## அரச நிறுவனங்களுக்கு வரும் மக்களுக்கு எந்தவித இடையூறுகளும் ஏற்படுத்தப்படா!

### மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

கொழும்பு, ஏப். 29

அரச ஊழியர்களை விசேட சேவை முறைக்கமைய பணிக்கு அழைக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எனினும் அதன் ஊடாக பொது மக்களுக்கு சேவை வழங்கும் போது எவ்வித தடையும் ஏற்படாதென அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

பொது மக்களுக்கான சேவையை முழுமையாக வழங்கும் நோக்கில் ஊழியர்களை அழைப்பதற்கு நிறுவனத்தின் பிரதானிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அவசியமான காரணத்துக்காக மாத்திரம் அரச நிறுவனத்துக்கு பொது மக்கள் வருகை தர வேண்டும் என அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் நிலைமையைக் கருத்திற் கொண்டு மக்கள்ஒவ்வொருவரும்பொறுப்புடன்செயற்படவேண்டியது அனைத்து தரப்பினரதும் பொறுப்பாகும். நாட்டில் நிலவும் கொரோனா நிலைமைக்கு மத்தியில் அதிகாரிகள் பணிக்கு அழைப்பது தொடர்பில் விசேட சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.04.2021 இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org